பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.
LIBRARY
JAFFNA

விலை ரூபா 25.00 28.03.2010

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்


PAATHUKAVALAN

REGISTERED AS A CATHOLIC WEEKLY (G.P.O.197) FOUNDED 19 FEB 1876

மலர்: 134 இதழ்: 05 பக்கங்கள்: 12 St.Joseph's Catholic Press, 360 Main Street P.O. Box. 2, Jaffna, Sri Lanka. Tel. 021 222 2378, Fax 021 222 9041, ISSN 1391 - 7633

## அல்லேலூயா! அல்லேலூயா! அல்லேலூயா!





## ஆயரின் ஆசிச்செய்தி

30 வருட காலமாக நடந்த போரின் துன்பியல் வாழ்வு முடிந்து அமைதியின் காற்றை சுவாசிக்கின்றோம். இராணுவ கெடுபிடிகள் ஓய்ந்து மக்கள் சுதந்திரமாக நடமாட, பயணம் செய்ய முடிகின்றது. தெற்கில் இருந்தும் எண்ணற்ற மக்கள் நாள்தோறும் யாழ்ப்பாண பிரதேசத்தை தரிசித்து மீண்டும் தமது உறவுகளை புதுப்பித்து கொள்கின்றார்கள். இக்கால கட்டத்தில் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பை நினைவு கூரும் பாஸ்கா திருநாளை எதிர் கொள்ளுகின்றோம். போர் ஓய்ந்தாலும் இதனால் பாதிக்கப்பட்ட 3 லட்சத்து மக்களுடைய துன்பங்கள் என்னும் ஓயவில்லை. இன்னும் 80,000 மக்கள் பெண்கள், சிறுவர்கள் வன்னி அகதி முகாம்களிலே வாழ்கின்றனர் எப்போ வீடு திரும்புவோம் என்ற அங்கலாய்ப்போடு தம் நாட்களை செலவழிக்கின்றனர்.

இயேசுவின் பாடுகள் எப்போதும் எமது துன்பியல் வாழ்வில் துணிச்சலுடன் பயணத்தை மேற்கொள்ள உறுதிதருகின்றது. அவர் எங்களுக்காக காயப்பட்டார். எங்களுக்காக நொறுக்கப்பட்டார். அவர் காயங்களினால் நாம் புனிதமானோம். இன்றைய சுமக்கமுடியாத வாழ்வின் பழுக்களைதாங்கி வாழ சிலுவைமுன் உதாரணமாக இருக்கின்றது.

மேலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வடமராட்சி பகுதிகளில் மீள் குடியேற்றம் செய்யப்படும் மக்கள் எதிர்கொள்ளும் சவால்கள், இன்னல்கள், சிலுவைகளில் நாமும் பங்கு கொள்ள முயல்வோம்.

பெரிய வெள்ளி இன்றி உயிர்த்த ஞாயிறு இல்லை. தமது பாடுகள் மரணம் மூலமாக இயேசு மீண்டும் உயிர் பெற்றார். இறைவனின் திரு உள்ளத்துக்கு ஏற்றபடி வாழ்வதே எமது மீட்பு என உணருவோம். இலகுவாக இருக்கும் போது மிக பளுவாக இருக்கும் போதும் உமது விருப்பத்தின் படியே ஆகக்கடவது. என்ற தந்தையின் விருப்பத்துக்கான இயேசுவின் பணிவைப் போல நாமும் அவர் விட்டுச் சென்ற வழியில் பயணிப்போம்.

கோதுமை மணி நிலத்தில் விழுந்து மடிந்தால்தான் அதிக பலனைக் கொடுக்கும். இயேசுவின் பாடுகள் மரணம் உயிர்ப்பு கிறிஸ்தவ ஆன்மீக வாழ்வில் ஊற்றாய் விளங்குகின்றது. உயிர்த்த ஞாயிறு நாம் கொண்டாடும் திருப்பலியும் இதையே உணர்த்துகின்றது. எமது துன்பங்கள் முடிவுறும். எம் கண்ணீர் எல்லாம் அவர் துடைத்தருள்வார். மனிதம் மீண்டும் சிறப்புறும். இதுவே உயிர்த்த ஞாயிறு எமக்கு விடும் நற்செய்தி.

அனைவருக்கும் எமது உயிர்த்த இயேசுவின்
அன்புமிகு வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

## 70 வது குருத்துவ அகவையில் அருட்திரு. மதுரநாயகம் அடிகள்



யாழ் மறைமாவட்டத்தின் மூத்த குருக்களில் ஒருவரும், கல்வியாளரும், மனித நேயம் மிக்கவருமான அருட்திரு. மதுரநாயகம் அடிகள் தமது குருத்துவ வாழ்வின் 70வது ஆண்டு நிறைவை அடைகிறார். புனித பத்திரிசியார் கல்லூரியின் புகழ்பூத்த அதிர்பர்களில் ஒருவர் இவர் கண்டிப்போடு கூடிய அன்பு, ஒழுக்கம் இறைபக்தி, கல்வி ஆகியவற்றில் கல்லூரியை வளர்க்க அயராது பாடுபட்டுழைத்தவர்.அருட்தந்தை காலத்தில் கல்விகற்ற பல பழைய மாணவர்கள் உள்நாட்டிலும் உலகின் பல்வேறு நாடுகளிலும் நல் நிலையில் இருப்பது பெருமைக்குரியதே எளிமையும், கடின உழைப்பும், நீண்ட ஆயுளும் கொண்ட தந்தை அவர்களை இறைவன் தொடர்ந்தும் ஆசீர்வதிக்க பிரார்த்திக்கின்றோம். இவர் அருட்தந்தையர்கள் மைக்கல் சவுந்தரநாயகம், சகாயநாயகம் ஆகியோரின் நெருங்கிய உறவினர். இந் நன்நாளில் காவலன் தனது வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றது.

## ஈஸ்ரர் நல்வாழ்த்துக்கள்

பாதுகாவலன் வாசகர்கள், சந்தாதாரர்கள்,
எழுத்தாளர்கள், அபிமானிகள், ஆதரவாளர்கள்
ஆகிய உங்கள் அனைவருக்கும்



புனிதவளன்
கத்தோலிக்க
அச்சகமுகாமையாளர்,
பாதுகாவலன் ஆசிரியர்,
அச்சக ஊழியர்கள்
ஆகிய நாம்
அமைதி பொங்கும்
ஈஸ்ரர்
நல்வாழ்த்துக்களை
தெரிவித்துக்
கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்
PAATHUKAVALAN

ஆண்டவர் நகரைக் காக்காவிட்டால் காவலர்கள் விழித்திருப்பது வீணாகும்

# எங்கே இறை பிரசன்னம்

இறைவனின் சாயலாக படைக்கப்பட்ட மனிதன் இவ்வுலகில் வெறும் மனிதராக மட்டும் வாழவேண்டும். என வேதங்கள் கூறவில்லை. கிறிஸ்தவர்களாகிய எங்களுக்கு கிறிஸ்து வாழ்ந்து காட்டிய வாழ்க்கை என்றும் வாழ்வும், வழியும், ஒளியும், தெளிவுமாய் விளங்குகின்றது. கடவுள் தன்மையில் விளங்கிய அவர் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் தன்மை பூண்டு மனிதரானார். [பிலி 2:7] மனித உருவில் தோன்றி சாவை ஏற்கும் அளவுக்கு அதுவும் சிலுவைச்சாவை ஏற்கும் அளவுக்கு வாழ்ந்தார். கிறிஸ்தவர்களாகிய நாம் பிறரின் துன்பங்களில் பங்கு கொண்டு வாழ்வதே உயிர்த்த கிறிஸ்துவுக்கு சான்று பகரும் உன்னத மக்கள் ஆவோம். இன்றைய சூழ்நிலையில் நாம் பல்வேறு வகையான பாதிப்புக்கள், துன்பங்கள், அழுத்தங்கள் மத்தியில் வாழ்ந்து வருகின்றோம். இது நிதர்சனமான உண்மையாகும். இக்நெருக்கடியான சூழ்நிலையின் மத்தியிலும் இறைவனின் இரக்கமும், பிரசன்னமும் நம்மைத்தாங்கிச் செல்கின்றன என்பது அழியாத உண்மையாகும்.

நாம் இறைபிரசன்னத்தை எங்கும் தேடி அலையவேண்டியதில்லை. பாரம்பரியங்களை, சட்டதிட்டங்களை, நிறைவேற்றுவதனால் இறைபிரசன்னம் எங்கள் மத்தியில் இருக்கின்றது என உறுதி செய்து விட முடியாது. மாறாக அயலில் இருக்கும் எம் சகோதரனின் அன்பும் ஆதரவும் தேவைப்படுவோர் போரின் கொடுமையால் பாதிக்கப்பட்டோர். வைத்தியசாலையில் இருப்போர் கல்வியை தொடரமுடியாது அங்கலாய்த்து நிற்கும் ஏழைச்சிறுவர்கள் நிர்க்கதியான கைம்பெண்கள் என துயர்பத் துக்குமேல் துன்பத்தை சுமந்து கொண்டு இறைவனின் சாயலாகவாழும் அயலவர்களில் உயிர்த்த கிறிஸ்துவின் பிரசன்னத்தை காண்பதே நமது வாழ்வின் நோக்கமாக வேண்டும்.

## சிந்தனைத் தூறல்கள் - 06

### அப்துல் ரகுமானின்

### சிறகுகளின் நேரம் மனக்கடை

எல்லாக் கடைகளையும் மூட முடிந்தால் நல்லதுதான். அது உன்னால் முடியாது. எனவே, ஒரு கடையை மூடு. அப்படி மூடினால் அது ஓய்வுதான். மனம் ஒரு குழந்தை மாதிரி. குழந்தைகள் ஏதேனும் ஒரு விளையாட்டில் மிகுதியாக ஈடுபட்டு அதையே செய்து கொண்டிருக்கும். அப்படி இருப்பது குழந்தைக்கு நல்லதல்ல என்று நமக்குத் தெரிந்தால் நாம் அதை வேறொரு விளையாட்டின் பக்கம் திசை திருப்பி விடுகின்றோம் குழந்தை பழைய விளையாட்டை மறந்துவிட்டுப் புதிய விளையாட்டில் ஈடுபட்டு விடும் மனத்தையும் இப்படி திசை திருப்பலாம்'

இதனால் மனம் களைப்படையாதா?' 'அடையாது. நீ களைப்போடு வீடு திரும்பினாலும் தொலைக்காட்சி பார்க்கிறாயல்லவா?

'ஆமாம். பார்க்கிறேன்.' அப்போது களைப்பு அடைகிறாயா?

'இல்லை'

'புத்துணர்ச்சி அடைகிறாயல்லவா?

'ஆமாம்'

'அப்படித்தான் மனமும் வேறு சிந்தனையில் ஈடுபடும் போது புத்துணர்ச்சி அடைகிறது. மனம் ஒன்றையே சிந்தித்துக் கொண்டிருந்தால் களைப்பு அடைந்து விடும். அது எவ்வளவு சிறந்த விஷயம் என்றாலும் சரிதான்.'

'மனக் கடையை முழுவதும் மூட முடியாதா?'

'முடியும்'

எப்படி மூடுவது?

'எண்ணமே இன்றி இருப்பதுதான் மனக் கடையை மூடுவதாகும்.'

'நீங்கள் ஏன் அதை எனக்குப் பரிந்துரைக்கவில்லை?.

'அது எளிதல்ல. மனம் ஒரு கணம்கூடச் சும்மா இருக்காது. அதை அடக்குவது கடினம். அதனால்தான் எது உன்னால் முடியுமோ அதைச் செய்யச் சொன்னேன்.'

'என் நேரமெல்லாம் வியாபாரத்திலேயே போய்விடுகிறது. நான் இறைவன் மீது பக்தி உடையவன். ஆனால் என்னால் பூசை, புனஸ்காரங்கள் செய்ய முடியவில்லை. அது மனச்சாட்சியை உறுத்திக் கொண்டேயிருக்கிறது.

'பூசை, புனஸ்காரம்தான் பக்தியைக் காட்டும் வழி என்று யார் சொன்னது?

'பிறகு எது பக்தியைக் காட்டும் வழி?

'நீ வியாபாரி. உன் வியாபாரத்தை நீ நேர்மையாகச் செய்தாலே போதும். அதுதான் உயர்ந்த வழிபாடு.'

'வியாபாரமே வழிபாடா? எப்படி?

'வியாபாரி லாபத்துக்குத்தான்வியாபாரம் செய்கிறான் என்றாலும் அதுவும் ஒரு மக்கள் பணிதான் எங்கெங்கோ விளையக் கூடியவற்றை வாங்கி ஓரிடத்தில் தொகுத்து வைத்துத் தேவைப்பட்டவர்களுக்குக் கொடுப்பதால் அது மக்கள் பணிதான். (தூறல் தொடரும்...)

# ஞாயிறு தியானத் துளிகள்

## பாஸ்கா காலம் 2ம் ஞாயிறு

### - பாவிகளைத் தேடிவந்த இயேசு -

**தி.ப. 5:12- 16 திவெ. 1:9-13,17-19 யோவா 20:19-31**

**இயேசு தோற்றுவித்த இயக்கம்**

கடவுள் தன்மையைத் துறந்து வந்த இயேசு நான்கு சுவர்களுக்குள் அடங்கிக் கிடக்கவில்லை. அடுத்தவர் தம்மைத் தேடி வரட்டும் என்று இருக்கவில்லை. பாவிகளைத் தேடிச் செல்கிறார். (லூக். 19:1-10). காணாமல் போன ஆடுகளைத் தேடி அலைகிறார். நிரந்தரமாக ஒரு கூட்டம் அவரைச் சூழ்ந்திருக்கிறது. சந்தர்ப்பவாதிகள் பலர் அதில் இருந்தாலும் உண்மையான சீடர்களும் இருக்கத்தான் செய்தார்கள். துன்ப நேரத்தில் சிதறுண்டு போனாலும் மீண்டும் சேர்கிறார்கள். அவர்களுடைய முன்னைய அனுபவம் அவர்களை ஒன்று சேர்க்கிறது. இயேசுவை மையமாக வைத்து ஒரு திருக்கூட்டம் உருவாகி, ஓர் இயக்கம் ஆரம்பமானது.

**இறைவார்த்தையை வாழ்ந்து காட்டிய திருக்கூட்டம்**

தன்னை மையமாக வைத்து வாழ்ந்த திருக்கூட்டத்திற்கு உயிர்த்த இயேசு புத்துயிர் கொடுத்து விட்டார். அவரது போதனைகளும் செயல்களும் நினைவில் நீங்காமல் நின்று ஒன்று சேர்த்தன. அடிக்கடி ஒன்று கூடினார்கள். ஒரே மனதாய் கூடிச் செபத்தில் நிலைத்திருந்தார்கள். (தி.பா. 2:46) அனைத்தையும் பொதுவாகக் கொண்டு அவரவர் தேவைக்கேற்பப் பகிர்ந்து வாழ்ந்தார்கள். அன்புச் சமூமாக வாழ்ந்து கிறிஸ்துவை பிரதிபலித்தார்கள்.

**விளைவு**

திவ்விய நற்கருணையில் மட்டுமல்ல திருநூலில் மட்டுமல்ல. வழிபாட்டுக் கொண்டாட்டத்தை தலைமை ஏற்று நடத்தும் குருவில் மட்டுமல்ல, திருக்கூட்டத்திலும் இயேசு பிரசன்னமாகிறார். நம்மோடு பேசுகிறார், தம்மையே எமக்கு உணவாகத் தருகிறார். ஆனால் நாம் இங்கு கூடிவருகின்ற பொழுது இயேசுவைச் சந்தித்த உணர்வு நமக்கு வருகிறதா? விசுவாச அனுபவத்தை வளர்க்கின்ற சூழ்நிலையை ஏன் ஏற்படுத்தக்கூடாது?

பங்கு என்பது பல சமூகங்களை உள்ளடக்கிய ஒரு சமூகம் என்கிறார் திருத்தந்தை 2ம் யோண் பவுல். பங்கு அளவில், பெரிய கூட்டமாக இருக்கின்ற பொழுது, நற்புறவு நம்மில் வளர்வது அரிது. எனவே ஒரு பங்கானது பல சமூகங்களாக இயக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார். அடித்தளக் கிறிஸ்தவ சமூகங்கள் அல்லது அன்பியங்கள் என்று அவரைப் பெயரிட்டுப் பல மறைமாவட்டங்களிலே செயல்படுத்துகிறார்கள். இத்தகைய அன்பியங்களில் சிறு குழுவாகச் சேர்ந்து செபிப்பதற்கும், இறைவார்த்தையைப் பகிர்ந்து கொள்வதற்கும் அதன் பயனாக விசுவாச அனுபவம் பெறுவதற்கும் வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கின்றன. மேலும் தனி மனித, சமூகப் பிரச்சினைகளையும் ஆய்ந்து, நலிவடைந்தோருக்கு உதவி செய்து நற்புறவை வளர்த்து, அன்புச் சமூகமாக வாழவும் வாய்ப்புக்கள் நிறையவே இருக்கின்றன.

## பாஸ்கா காலம் 3ம் ஞாயிறு

### - அஞ்சாதே அஞ்சாதே அஞ்சாதே -

**திப. 5:27-32, 40-41 திவெ. 5:11-14 யோவா 21:1-19**

**முதல் அழைப்பு : லூக் 5:1-11**

கெனசரேத்து ஏரியில் திரண்டிருந்த மக்களுக்கு போதித்த பிறகு இயேசு பேதுரு தம் தோழர்களையும் மீன்பிடிக்க அழைத்தார். இயேசு சொன்னபடியே வலை வீசப்பட்டது. ஏராளமான மீன்கள் பிடிபட்டன பிரமாண்டத்தை கண்டவர்கள் பேதுருவோடு சேர்ந்து திகைப்புற்றனர். இயேசு, "அஞ்சாதே! இதுமுதல் நீ மனிதரைப் பிடிப்பவன் ஆவாய்", என்று சொல்லி பேதுருவை முதல் முறையாக அழைத்தார் பிரமாண்டத்தைக் கண்ட பேதுரு அது தன்னை மேன்மையாக்கும் என்று கருதினார்.

**இரண்டாம் அழைப்பு : யோவா 21:1-19**

பிரமாண்டம், பெரிய அதிசயங்கள் நடக்கும் என்று எண்ணியிருந்த பேதுருவுக்கு இயேசுவின் சாவு ஒரு பேரிழப்பாகவே இருந்தது. ஆகையால் தமது அழைக்கப்பட்ட வாழ்வை விட்டுவிட்டுப் பழைய மீன்பிடித் தொழிலுக்கு புறப்பட்டார். அப்போதுதான் உயிர்த்த இயேசு அவரை இரண்டாம் முறையாக ஆட்கொண்டார். கலிலேயாக் கடலில் உயிர்த்த ஆண்டவர் அவர்களுக்குத் தோன்றினார். மீன் பிடிக்க மீண்டும் அவர்களை அழைத்தார். அப்போது அதே அதிசயம்! ஏராளமான மீன்கள் பிடிபட்டன. பேதுருவை இரண்டாம் முறையாக ஆட்கொண்ட இயேசு இப்போது தம் மந்தையைப் பேணிக்காக்க முழு அதிகாரத்தை அவருக்குக் கொடுத்தார்.

## பாஸ்கா காலம் 4ம் ஞாயிறு

### - இயேசுவே நல்ல ஆயன் -

**திப. 13:14, 43-52 திவெ. 7:9,14--17 யோவா 10:27-30**

**இயேசுவே நல்ல ஆயன்**

நாம் புரிந்து கொள்ளக் கூடிய இச்சாதாரண மேய்ப்பன் ஆடுகள் உறவை உருவகமாகப் பயன்படுத்தித் தனக்கும், தம்மால் மீட்கப்பட்ட மக்களுக்கும் இடையே இருக்கும் ஆழ்ந்த உறவை விளக்குகிறார் இயேசு. இறைவனின் செம்மறியானவர் அவர்களை மேய்த்து வாழ்வளிக்கும் நீர் ஊற்றுக்கு அவர்களை நடத்திச் செல்வார். கடவுள் அவர்களது கண்ணீர் அனைத்தையும் துடைத்து விடுவார். என்று தம் காட்சியாக மத்தியிலே புனித யோவான் கூறுவதும் இக்கருத்தை உறுதி செய்கிறது. இயேசு தமது இரத்தத்தைக் கொண்டு தீயோனின் தாக்குதலில் இருந்து நம்மை விடுவிக்கிறார். தமது உயிரையும் கொடுக்கிறார். என் ஆயன் ஆண்டவர் எனக்கென்ன குறையுண்டு என்ற சங்கீத ஆசிரியரின் அக்களிப்பு நல்லாயனாகிய கிறிஸ்துவில் நிறைவு பெறுகிறது. மனித மேய்ப்பர்கள் கடமையிலிருந்து தவறிய போது நாமே இனி நம்முடைய ஆடுகளைத் தேடி போவோம். (எசேக் 34: 11) என்றார் இறைவன். இயேசுவின் மேய்ப்புப் பணியில் நிறைவேறுகிறது அவ்விறைவாக்கு. மேய்ப்பர்கள் இயேசுவின் பிரதிநிதிகள்.

கிறிஸ்துவின் இம்மேய்ப்புப் பணி எக்காலத்துக்கும் எல்லா மக்களுக்கும் கிடைக்கச் சிறந்த கருவியாகப் புனித பவுலடியாரும், பர்னபாவும் கூறியது போன்று உலகின் இறுதி எல்லை வரைக்கும் மீட்பைக் கொண்டு செல்லப் புறவினத்தாருக்கு ஒளியாக திருச்சபையை ஏற்படுத்தினார் இயேசு. மேய்ப்பன் மந்தை உறவு கிறிஸ்தவ சமுதாயத்தில் எவ்வாறு இருக்கிறது என்று சிந்தித்துப் பார்க்கத் திருச்சபை நம்மை அழைக்கிறது. இறை அழைத்தல் பெற்ற அனைவரும் கிறிஸ்துவின் பிரதிநிதிகள். அவர்கள் செய்யும் பணிகளை யாவும் கிறிஸ்துவின் மேய்ப்புப் பணியின் தொடர்ச்சியே. நல்ல ஆயன் கிறிஸ்துவின் குரல் மேய்ப்பர்களின் வார்த்தைகளில் எதிரொலிக்கப்பட வேண்டும்.

**யாழ் மறைமாவட்ட இணைப்பாளராக**

அருட்பணி. M.E. பயஸ் அடிகளார் வணக்கத்துக்குரிய யோசவாஸ் அடிகளாரின் யாழ் மறைமாவட்ட ஆணைக்குழு இணைப்பாளராக நியமனம் பெற்றுள்ளார். இவரின் இப்புதிய பணி சிறக்க பாதுகாவலன் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களும் செபங்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பை பூட்டி வைக்காதீர்கள்

K. கரோலின் பிறிஸ்டா, இளவாலை.

மனித மனம் ஏக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு வயதிலும் ஒவ்வொன்றிற்கான ஏக்கம். ஏக்கத்தின் முகங்கள் ஏராளம். ஏக்கங்களின் வகைகள் எதுவாக இருந்தாலும் அன்பிற்கான ஏக்கம் இங்கே நம்மிடம் அதிகம் உள்ளது அன்பிற்கான தேடலும் மிக அதிகம்.

அன்பே உருவான தேசம் நம் தேசம். அன்பைப் போதித்தவர்கள் நாம். அன்பே கடவுள் என உலகிற்கு உரக்கச் சொன்னவர்கள் நம் முன்னோர்கள். ''அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்''. இது வள்ளுவரின் வைரவரி.

இப்போ பல குடும்பங்களின் பிரச்சினையே அன்புதான். அன்பு பூட்டப்படுகிறது. அன்பிற்கு இங்கு பஞ்சமில்லை. அன்பே உருவானவர்களாக நம்மில் சிலர் தெரியாமலேயே அன்பைப்பூட்டி வைக்கின்றோம். உண்மையில் வள்ளுவர் சொன்னதைப் போல் அன்புக்கு பூட்டு தேவையில்லை. தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றுமே வெற்றிக்கு இன்றியமையாதது. அத்துடன் இவை அனைத்திற்கும் மேலாக அன்பு இருக்க வேண்டும்.

காலில் சக்கரங்களைக் கட்டிக் கொண்டு வாழ்க்கைக்கான தின சரிப்பயணம் ஒரு புறம். வேலைப் பளுவும், வேலைக்கான பயண அலைச்சலும் இன்னொரு புறம். பசி, தேவைக்கான பணம் ஈட்டலில் தினப் போராட்டம் மற்றொரு புறம். வாழ்க்கைக்கான ஓட்டத்தில் பலரின் இளைப்பாறுதல் கொஞ்ச நேரம் தான். ''அன்பு என்னிடம் இல்லாமல் இல்லை. ஆனால் அன்பு செய்ய நேரம் தான் இங்கு இல்லை'' என்ற புலம்பல்களும் உண்டு.

என் குடும்பத்திற்கான எல்லா தேவைகளையும் பூர்த்தி செய்து விட்டேன். பணம், கார், பங்களா வசதிகள் எல்லாம் கொடுத்து விட்டேன். இனி அவர்களுக்கு என்ன வேண்டும்? என அன்பு ஒன்றை மறந்து விட்டு பேசுகிறவர்கள். கார், பணம், பங்களாவை விட அன்பின் சக்தி அதிகம் என்பதை அறியாதவர்கள்.

இங்கு சிலர் அன்பைக் கொட்டுவார்கள். பலர் அடக்கி வைக்கிறார்கள். அன்பிற்கு அணை கட்டு தேவையில்லை. தேக்கி வைத்து திறந்து வரும் அன்பிற்கு ஆற்றல் அதிகம்தான். ஆனால் தேக்கி வைத்து திறந்து விடும் அன்பை விட வற்றாத நதியாய் தாகம் எடுக்கும் போது தவிப்பைத் தணிக்கும் அன்பு தான் பெரிது. உள்ளத்துக்குள் கிடைக்கும் அன்பிற்கு உணர்ச்சிகள் வேண்டுமானால் அதிகமாய் இருக்கலாம். வீசும் தென்றலாய் தேவையான சூழ்நிலையில் அன்புக்குரியவரின் வியர்வை துடைக்காத அன்பில் பயனில்லை.

சின்னச் சின்ன சந்தோசங்கள், மனம் விட்டுப் பேசி பகிர்தல்கள், தொட்டுப் பேசும் ஸ்பரிசங்கள் இங்கு இப்போது மிக அதிகமாய் தேவையாய் உள்ளது. குழந்தைக்கு லாலிபப்பும், பொம்மையும் வாங்கிக் கொடுத்தால் மட்டுமே அன்பின் பகிர்தல் அல்ல ஒரு குழந்தையிடம் குழந்தையாய் மாறி விளையாடும் பெற்றோரின் அன்பே குழந்தைக்குப் பிடிக்கும்.

கணவன், மனைவி, அண்ணன், தம்பி, அக்கா, தங்கை, பெற்றோர், குழந்தைகள் என்ற உறவுகளின் அன்பு நண்பர்கள், உறவினர்கள், அக்கம்பக்கம், அலுவலகம் என எங்கும் உங்கள் அன்பின் வீச்சு இருக்க வேண்டும்.

அன்பை மட்டுமல்ல கண்டிப்பையும் நாம் கற்றுக் கொள்ள வேண்டும். கண்டிக்க வேண்டிய இடத்தில் கண்டியுங்கள் , தட்டிக் கொடுக்க வேண்டிய தருணத்தில் தட்டிக் கொடுங்கள் தோள் கொடுக்க வேண்டிய சூழ்நிலையில் சுமையை ஏற்றுக் கொள்ளுங்கள். தவித்த நேரத்தில் கொடுக்கும் நீரின் சுவை அதிகம். தாகம் ஏற்படாத போது கொடுக்கும் இளநீரின் சுவைகூட குறைவுதான்.

அன்பு என்பது யோசித்து வருவதல்ல. அடக்கி வைத்து வெளியேற்றும் அன்பு வீணாகிப் போகும். ''நான் உன்மேல் அன்பாய் இருக்கிறேன் என்று சொல்லால் சொல்ல வேண்டியதில்லை, உங்கள் வெளிப்பாடே அன்பைச் சொல்லும். அன்பிற்கான ஏக்கம் இங்கே எல்லோருக்கும் இருக்கிறது. காலையில் வீட்டை பூட்டிவிட்டு மாலையில் நீங்கள் வீட்டுக்குள் நுழையும் போது உங்கள் வீட்டு நாய்க்குட்டி துள்ளிக்குதிக்கும். அதுகூட அன்பு தான்.

சின்னச் சின்ன வார்த்தைகள், ''ஏன்டா இப்படி இளைச்சுப் போயிட்ட'' ''ஒரு வாரமா உன்னைப் பார்க்காம என்னமோ போல் ஆயிட்டன்''. என்ற உணர்ச்சியுள்ள வார்த்தைகள், சின்னச் சின்ன ஸ்பரிசங்கள், உங்கள் பிரியமானவருக்கு கண்களை மூடும் இமையின் வேகத்தில் உங்கள் கைகள் ஓடி, தலையை தட்டிக் கொடுக்கும் அன்பின் ஸ்பரிசம் இங்கு எல்லோருக்கும் தேவையாய் உள்ளது.

புயல் வீசும் மனம் கொண்டு சாதிக்க இயலாது, தென்றல் வீசும் மனம் மட்டுமே வெற்றிக்கு சாத்தியம். அன்பு இங்கு மிக மிக முக்கியமானது. அந்த அன்பின் மூலம் ஆயிரம் அல்ல, இலட்சம் சாதனைகளை நிகழ்த்தலாம்.

**எனவே பாய்ந்து வரும் அன்பை எப்போதும் பூட்டாதீர்கள்.**

## பிரச்சினைகள் ஓயாது

கருவறை முதல்
கல்லறை வரை
அகரம் முதல்
னகரம் வரை
ஆரம்பம் முதல்
முடிவு வரை
''மனிதர்களே மனிதர்களே
நீங்கள் எதைத்
தேடுகிறீர்கள்'' என்றால்
அவர்கள் ''மகிழ்ச்சி''யை
என்பார்கள்!

குற்றம் புரிகின்றவர்கள்கூட
சற்று நேரம் மகிழ்ச்சியாக
இருக்கவே அக்குற்றத்தைப்
புரிகிறார்கள்!

நாம் தேடும் மகிழ்ச்சி
நமக்குக் கிடைக்கின்றதா?
கிடைக்கிறது
ஆனால் நாம் விரும்புகின்ற
அளவுக்கு நமக்குக்
கிடைப்பதில்லை! காரணம்?

பிரச்சினைகள்!
சில நாமே
சம்பாதித்துக் கொள்பவை
சில நம்மீது
திணிக்கப்படுபவை!

எத்தனை பிரச்சினைகள்!
பலூன் போன்ற வாழ்க்கை!
ஊசி போன்ற ஒரு சின்ன
பிரச்சினை!
அதுபோதும்
நமது வாழ்க்கையைப் பாழாக்க
பிறக்கப் போகும்
குழந்தைக்கு, பிறப்பேமா
என்ற பிரச்சினை!
பெண் குழந்தைப்
பிறந்துவிட்டால்
அதற்குப் பேராபத்து!

வளரும் குழந்தைக்குத்
தாய்ப்பால் கிடைக்குமா?
என்ற பிரச்சினை!
படிக்கும் குழந்தைக்கு
படிப்பு வருமா?என்ற பிரச்சினை

படித்தவர்களுக்கு
வேலை கிடைக்குமா?
என்ற பிரச்சினை!
வேலை கிடைத்தவர்களுக்கு
கூலி கிடைக்குமா?
என்ற பிரச்சினை

பிரச்சினை மேல் பிரச்சினை!
வாழ்க்கையில்
பிரச்சினைகள்
குறுக்கிடலாம்!
பிரச்சினைகளே சில சமயம்
வாழ்க்கையாக
மாறிவிடுகிறது!

- நன்றி தோழன் -

## வாழ்க்கை இனிமையானது
(சிறுகதை)

ஒருமுறை ஒரு வேலைக்காரன் தன் எசமானிடம் முறையிட்டுக் கூறினான். ''எனக்கு உதவி தேவைப்படுகின்றது இல்லாவிடில் எனக்குப் பைத்தியமே பிடித்து விடும். நான், என் மனைவி, பிள்ளைகள், மருமக்கள் அனைவரும் ஒரு தனி அறையிலேயே வசிக்கின்றோம். எங்கள் நரம்புகள் எல்லாம் வெடித்துவிடும் நிலையிலுள்ளது. நாங்கள் ஒருவர் மீது ஒருவர் இடறி விழுகின்றோம். அந்த அறை ஒரு நரகமாக உள்ளது''

அவனுடைய எசமான் கேட்டார்; ''நான் சொல்வதை நீ செய்வாயா?'' அவனும் ''நீங்கள் எதைச் சொன்னாலும் செய்வேன்'' எனக் கூறினான்.

அவர் அவனிடம் எத்தனை மிருகங்கள் உள்ளதென வினவினார். அவன் ஒரு பசு, ஒரு ஆடு, ஆறு கோழிகள் எனக் கூறினான். அவர் சொன்னார் அவற்றை எல்லாம் உன்னுடைய அறையினுள் உன்னோடு வைத்துக்கொள். ஒரு வாரம் முடிந்தபின் என்னை வந்து பார் எனக் கூறினார்.

அவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. எனினும் அப்படியே செய்வதாக கூறினான். அவன் தனது மிருகங்களை அறையினுள் அழைத்துச் சென்றான். ஒரு வாரத்தின் பின் பரிதாபமான கோலத்தோடு திரும்பி வந்து தான் ஒரு பைத்தியம் அழுக்கு நிறைந்தவன் தன்னில் ஒரு ஒவ்வாத மணம் வீசுகிறது. அங்கு எழும் சத்தங்களால் தம் அனைவருக்கும் முழுப் பைத்தியமே பிடித்து விடும் என்று கூறினான்.

எசமான் சொன்னார் உடனே மிருகங்களை அறைக்கு வெளியே அனுப்பு எனக் கூறினார்.

அந்த மனிதன் திரும்பி வீட்டுக்கு ஓடினான். அடுத்த நாள் திரும்பி வந்தான். அவன் கண்கள் மகிழ்ச்சியால் நிறைந்திருந்தது. வாழ்க்கை எவ்வளவு இனிமையாக உள்ளது. மிருகங்கள் வெளியேறி விட்டன. வீடு இப்போது ஒரு சொர்க்கம். அமைதியாகவும், சுத்தமாகவும் உள்ளது எனக் கூறினான்.

## யார் ஏழை?
(சிறுகதை)

ஒருமுறை வசதியான குடும்பத்தைச் சேர்ந்த தந்தை ஒருவர் ஏழைகள் எப்படி வாழ்கின்றார்கள் என்பதைக் காட்டத் தனது மகனை ஒரு கிராமத்துக்கு அழைத்துச் சென்றார்.

அவர்கள் மிகவும் வறிய குடும்பம் எனக் கருதப்படக்கூடிய குடும்பமொன்றுடன் சில பகல் பொழுதையும், இரவையும் ஒரு பண்ணையில் கழித்தார்கள்.

அவர்கள் திரும்பி நகருக்கு வரும்பொழுது தந்தை மகனிடம் தமது பயணம் எப்படி எனக் கேட்டார். அவன் மிகவும் பிரமாதம் எனப்பதிலளித்தான் எப்படி ஏழைகள் வசிக்கிறார்கள் என கண்டாயா? என மகனிடம் தந்தை கேட்டார். அதற்கு மகன் ஆமெனப் பதிலளித்தான் எனவே தந்தை அவனிடம் அவன் கற்றுக்கொண்டதைத் தம்மிடம் கூறும்படி கேட்டார். அவன் பின்வருமாறு பதிலளித்தான். எங்களிடம் ஒரு நாய் மாத்திரமே உள்ளது. அவர்களிடம் நான்கு உள்ளது. எங்களிடம் எங்கள் தோட்டத்தின் மையம் வரை செல்லும் அருவி ஒன்றுள்ளது. அவர்களின் அருவி அந்தம் தெரியாமல் நீண்டிருக்கிறது. எங்களிடம் வெளிநாட்டு லாம்புகள் உண்டு. அவர்களிடம் இரவில் ஒளி தரும் நட்சத்திரங்கள் உண்டு. எங்கள் முற்றம் வீட்டுக்கு முன் பக்கத்துடன் முடிவடைகிறது. அவர்களது முற்றமோ அடிவானம் வரை விரிந்துள்ளது. எங்களிடம் குடியிருக்க ஒரு சிறு நிலம் உண்டு. அவர்களிடம் எமது பார்வைக்கு அப்பால் விரிந்து பரந்து செல்லும் நிலமுண்டு எங்களுக்கு உதவ வேலைக்காரர்கள் உண்டு. ஆனால் அவர்கள் ஏனை யோருக்காக உழைக்கிறார்கள். நாங்கள் உணவை வாங்குகின்றோம். அவர்களோ தமது உணவைத் தாமே பயிரிடுகிறார்கள். எங்களைப் பாதுகாக்க எமது காணிகளுக்கு வேலியுண்டு. அவர்களைக் காக்க அவர்களுக்கு நண்பர்கள் இருக்கிறார்கள்.

அந்தப் பையனின் தந்தை பதிலளிக்க முடியாமல் தவித்தார். மகன் சொன்னான், அப்பா நாங்கள் எப்படி ஏழையாயிருக்கிறோம் எனக் காட்டியமைக்கு நன்றி எனக் கூறினான்.

## இது கதையல்ல...

அவர் எப்படி எப்படியோ சேர்த்துவிட்ட பணத்தினால் பணக்காரரானவர். சிலர் சொல்கிறார்கள், நாட்டுப் பிரச்சினைச் சமயத்தில், எல்லோரும் உயிருக்கு பயந்து ஓடிய போது இவர் கஸ்தூரியார் வீதியில் அமைந்திருக்கும் நகைக் கடைகளின் பக்கம் மேய்ந்தாரென்று. துணிச்சல்காரர். வேறு சிலர் சொல்கிறார்கள் வட்டிக்கு வட்டி வாங்கி சேர்த்தாரென்று. கஷ்டத்தின் நிமித்தம் ஈட்டுக்கு வைக்கப்பட்ட காணிகள் பலவற்றின் தற்போதைய உரிமையாளர். பண விடயத்தில் கறார் பேர்வழி. எச்சில் கையால் காகம் துரத்தவே மாட்டார். இரக்கமா? அது கிலோ என்ன விலை என்று கேட்கும் உபகாரி. இப்படி இந்த பணக்காரரைப் பற்றி ஏகப்பட்ட விமர்சனங்கள்.

இவ்வளவுக்கும் இந்தப் பணக்காரர், வெள்ளையும் வெள்ளையும் புதிதாக பார்ப்பவர்கள் இவரா இவ்வளவு விமர்சனங்களுக்கும் உரியவர் என்று நம்பவே மாட்டார்கள்.

பையிள் வாசித்தவர்களுக்குத் தெரியும். செல்வந்தர்கள் மோட்ச ராச்சியத்தில் நுழைவதைவிட, ஒட்டகம் ஊசிக்காதுக்குள் புகுவது எளிதாக இருக்குமென்று.

பணக்காரர்....

உருவம் மாறவில்லை. உள்ளம் மாறவில்லை. ஆனால் முகத்தில் மட்டும் தாடியும் மீசையும் வளர்ந்திருக்கிறது.

''ஏன் ஐயா, சேவ் எடுக்காமல்?''

''மடையா இப்ப என்ன காலமென்டு தெரியாதா?''

கேள்வி கேட்டவன் சங்கடத்துடன் நெளிகின்றான்.

''இது தபசு காலமடா, இந்தக் காலத்தில் எதையாவது ஒறுத்தல் செய்யவேண்டும். இப்ப புரியுதா? எனது ஒறுத்தல் பற்றி.''


அட இவர் சேவ் எடுக்கும் செலவை மிச்சம் பிடிக்க வெல்லோ ஒறுத்திருக்கிறார். இவர் ஒறுக்க வேண்டிய காரியங்கள் அநேகம் இருக்க...... வெளிவேடக்காரன் என மனதுள் எண்ணியபடி;

''புரிகிறது ஐயா''

பணக்காரர் பரம திருப்தியுடன் ராஜநடை போடுகிறார்.

- குருநகர் யோகி -
S.N.J. மரியாம்பிள்ளை
குருநகர், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உயிர்ப்பு உணர்த்தும் உண்மைகள்



- அருட்பணி. அ. ஸ்ரீபன் -

திருமறையை வாசித்துப் பார்க்கும்போது சிறப்பாக புதிய ஏற்பாட்டில் உயிர்த்தெழுதல் பற்றிய உண்மைகள் புலனாகின்றன. குறிப்பாக ஆண்டவர் இயேசுவின் போதனைகளிலும் செயல்களிலும் நான்கு முக்கியமான உயிர்த்தெழுதல் பற்றிய சிந்தனைகள் புலப்படுகின்றன. உதாரணம்; பாவத்திற்கு மரித்தோர் உயிர் பெற்றெழுதல், லாசறஸ், நாயீன் ஊர் விதவைப் பெண்ணின் மகன், யாயீரின் மகள் போன்றவர்கள் உயிர்பெற்றெழுதல் ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுதல், இறுதி நாளில் உண்டாகும் உயிர்த்தெழுதல் ஆகியவை பற்றிப் பேசப்படுகின்றன. நற்செய்திகளில் ஆண்டவர் இயேசுவின் உயிர்தெழுதல் பற்றி இயேசு பல திருமறைப் பகுதிகளின் வாயிலாக எடுத்துக் காட்டுகின்றார் (மாற் 8:30-31, 9:30-31). எனவே இந்த ஆய்வுக் கட்டுரையில் ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுதல் சம்பவம் எத்தகைய உண்மைகளை எமக்குக் கற்பிக்கின்றன என ஆராய்வோம்.

ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுந்த நிகழ்வுக்குப் பின்னர் புனித பேதுரு பெந்தக்கோஸ்தே பெருவிழாவின் போது இயேசுவின் உயிர்த்தெழுதல் நிகழ்வில் கடவுளின் செயற்பாடு பற்றி கூடி வந்திருந்த மக்களுக்கு விளக்கம் அளிக்கின்றார். அதாவது யூதமத அநீதியினாலும், அரசியல் அநீதியினாலும் இயேசு கொல்லப்பட்டார். இவ்வாறு கொலையுண்ட இயேசுவை கடவுள் உயிருடன் எழுப்பினார். இங்கே கடவுளின் வல்லமை அவரின் தலையீடு நீதியுள்ள செயற்பாடு போன்றவைகள் வெளிப்படுகின்றன. அநீதியான ஆண்டவரின் மரணத்தில் நின்று அவருக்கு உயிரைக் கொடுப்பதன் ஊடாக நீதியை நிலைநாட்ட கடவுள் வேட்கை கொண்டது விரும்பத்தக்கதாகும். எனவே, இயேசுவின் உயிர்த்தெழுதல் நிகழ்வு கடவுள் நீதியுள்ளவர் என்பதை உலகிற்கு வெளிப்படுத்திய உன்னத நிகழ்வாகும். இந்த நிகழ்வு இன்று எமக்கு மகிழ்வைத் தருகின்றது. ஏனெனில் நாம் வாழும் சூழலில் எத்தனையோ மக்கள் அநீதியான முறையில் மரணத்தை ருசி பார்த்துள்ளனர். இதன்மட்டில் நீதியுள்ள கடவுளின் செயற்பாடு, தலையீடு பூமியிலே ஒரு நாள் வெளிப்படும் என்ற உண்மை எமக்கு ஆறுதலை அளிக்கின்றது.

சமூக விடுதலை, சமூக மாற்றங்கள் சமூக நீதி போன்றவற்றுக்காகச் செயற்படுவோரின் வாழ்வு பாதியில் நிறைவடைவதை நாம் பார்த்திருக்கின்றோம். இதனால் சோர்வுற்ற சமூகம் சுயநலத்தை மையமாகக் கொண்டு அடக்குமுறைகளுக்கு அடிபணிந்து வாழப் பழகியுள்ளது. இத்தகைய பின்னணியில் ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு நிகழ்வு சமூக விடுதலைக்காக பணியாற்ற எம்மை இணைத்துக் கொள்ளுமாறு புனித பவுல் பிலிப்பியருக்கு எழுதிய கடிதத்தில் 2:5-11 வரையுள்ள பகுதியில் ஆண்டவர் இயேசு கடவுள் நிலையில் இருந்த போதிலும் அவர் இறங்கி வந்து அடிமையின், தாழ்மையின் ரூபம் எடுத்தும் சிலுவையின் மரணபரியந்தம் தம்மைத்தாமே தாழ்த்தினார். இந்த அனுபவத்திற்கு ஊடாக சென்ற இயேசுவை கடவுள் உயிரோடு எழுப்பி எல்லோருக்கும் மேலாக உயர்வடையச் செய்தார் என புனித பவுல் கூறுகின்றார். அதாவது, துன்பங்கள் வாயிலாக வரும் மகிமையைப் பற்றி இங்கு சிந்திக்கின்றோம். இவ்வாறான உயிர்த்தெழுதல் அனுபவமே ஆங்காங்கு மக்கள் தங்களை பிறருக்காக அர்ப்பணிக்க வழிவகுக்கின்றது. உதாரணம் இந்த அனுபவத்தின் ஒளியிலேயே அருள்பணியாளர்களான ஜிம்பிறவுன், சறா போன்றவர்கள் விடுதலைப்பணியில் தம்மை இணைத்துக் கொண்டனர். இன்றும் துன்பத்தின் ஊடாக வரும் மகிமையின் மேன்மையை கருத்தில் கொண்டு சமூக நீதிக்காக பணியாற்ற உயிர்த்தெழுந்த இயேசு எம்மை அழைக்கின்றார். அவ்வாறு நாம் பணியாற்றும் போது கடவுள் எவ்வாறு இயேசுவை உயர்த்தினாரோ அதேபோன்று நாங்களும் இறப்பிலும் வாழ்வோம் என்ற நம்பிக்கை எமக்கு உண்டாகின்றது.

உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு நற்செய்திகளின் அடித்தளத்தில் தமது சீடர்களிடத்தில் சென்று அவர்களுடன் உரையாடுவதிலும் உணவு அருந்துவதிலும் ஈடுபட்டதாக வாசிக்கின்றோம். இந்த நிகழ்வைப் பார்க்கும்போது தம்மைக் காட்டிக் கொடுத்தவர்கள் என்றோ, மறுதலித்தவர்கள் என்றோ தன்னைக் கைவிட்டவர்கள் என்றோ, துரோகிகள் என்றோ, சீடர்களை எண்ணிவிடாமல் அவர்களை பழிவாங்காமல் மன்னித்து வாழ்வளிப்பதைப் பார்க்கின்றோம். இந்த அனுபவம் எம்மை வலுவாகச் சிந்திக்க வைக்கின்றது. நாம் வாழும் சூழலில் அரசியல் பழிவாங்குதல்களும் மத பழிவாங்குதல்களும் நாளுக்குநாள் அதிகரித்துச் செல்லுகின்றன. இத்தகைய சூழ்நிலையில் உயிர்த்த இயேசுவின் மன்னிக்கும் அனுபவம் எமக்கு அவசியமாகின்றது. தன்னைத் தவறாக புரிந்தவர்களையும் தனக்குத் தீங்கு செய்தவர்களையும் குறித்து எத்தகைய கருத்துக்களையும் சீடர்களை நோக்கித் தெரிவிக்காது அவர்களை உள்ள நிலையிலேயே ஏற்றுக் கொண்டு மன்னிப்பு அளிப்பதை இங்கு நாம் காண்கின்றோம். இந்த நிகழ்வு எம் தேசத்திற்கு மிகப் பொருத்தமாகும். தவறிழைத்தவர்களை மன்னிப்புடன் உள்ள நிலையில் ஏற்றுக்கொள்ள முடியுமா என உயிர்த்த இயேசு சவால் இடுகின்றார்.

வரலாற்றை வாசித்துப் பார்க்கின்ற போது குறிப்பாக பழைய ஏற்பாட்டில் நீதிமான்களின் மரணம் பலருக்கு குழப்பத்தை ஏற்படுத்தியது உதாரணம் மக்கபேயர் காலத்திலே நடைபெற்ற யுத்தத்தின் போது யூதர்கள் ஓய்வு நாளிலே யுத்தம் புரியாது தம்மை அழிக்கவந்த எதிரிகளுக்கு கூட பதில் தாக்குதல் புரியாமல் இருந்தனர். இதனை வாய்ப்பாகக் கொண்ட எதிரிகள் யூதர்களை இரக்கமின்றிக் கொன்றனர். இதனைக் கண்ட மக்கள் ஓய்வு நாள் சட்டத்தை சரிவர கடைப்பித்த போதிலும் கடவுள் ஏன் யூதர்களின் மரணத்தை தடுக்கவில்லை. எனவே, இவ்வாறு தவறிழைக்காமல் மரித்துப்போன நீதிமான்களுக்கு என்ன நடைபெறும் என்ற சந்தேகம் மக்கள் மத்தியிலே காணப்பட்டது. அதாவது நல்லவர்கள் ஏன் துன்பப்பட வேண்டும். இப்பேற்பட்ட வினாக்களுக்கு ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு பதிலளிக்கின்றது. அதாவது, அவர்களின் மரணம் அல்லது துன்பம் தற்காலிகமானது ஆகும் இதன் ஒளியில் கடவுள் தீமைகளை அல்லது தீயவர்களை நடுத் தீர்ப்புக்கு உள்ளாக்குவார் என்ற உண்மையையும் திருத்தூதர் பணிகள் 10:42 இல் காணலாம். அதாவது தீமைகள் மிகுந்துள்ள உலகில் நாம் வாழும் போது இத்தீமைகள் கடவுளால் நடுத்தீர்ப்புக்கு உள்ளாகும் என்றும் தீமைகளை நன்மை மேற்கொள்ளும் என்ற உண்மையும் இயேசுவின் உயிர்ப்பின் ஊடாக வெளிப்படுகின்றது. இந்த வெளிப்பாட்டின் ஊடாக பிறக்கும் நம்பிக்கை தொடர்ந்தும் தீமைகளுக்கு எதிராகச் செயற்பட எம்மை அழைக்கின்றது.

மத்தேயு நற்செய்தியின்படி உயிர்த்தெழுந்த ஆண்டவர் கலிலேயாவுக்குச் சென்றுள்ளதாக ஆசிரியர் காண்பிக்கின்றார். இதன்படி கலிலேயா என்பது ஒடுக்கப்பட்டவர்கள் ஓரங்கட்டப்பட்டவர்கள், ஏழைகள், பாவிகள் வாழ்ந்த ஒரு பகுதியாகும். எனவே, உயிர்த்தெழுந்த ஆண்டவர் தொடர்ந்தும் தமது பணியை ஆற்றுவதற்காகவும் கலிலேயாவையே தெரிந்து எடுக்கின்றார். எனவே, இன்றும் திருச்சபை சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட மக்களுடன் தன்னை அடையாளப்படுத்தி பணியாற்ற வேண்டிய தேவையை உயிர்த்தெழுந்த இயேசு எமக்கு உணர்த்துகின்றார். எனவே தான் யோவான் நற்செய்தியின்படி ஆண்டவர் இயேசு மகதலேனா மரியாவை நோக்கி உயிர்ப்பின் செய்தியை

(10ம் பக்கம் பார்க்க...)

# புதுவாழ்வுக்கு நம்பிக்கை தருவது கிறிஸ்துவின் உயிர்ப்பே!

- அருட்சகோ. யா. றமேஸ் அ.ம.தி -



விடிந்து கொண்டிருந்தது எருசலேம் நகரம் இன்னும் துயிலெழவில்லை. சில பெண்களுக்கு மட்டும் தூக்கமில்லை. விடிந்தும் விடியாத நிலையில் நறுமணப் பொருட்களுடன் மங்கையர் மூவர் விரைந்து சென்றனர் ஒரு கல்லறை நோக்கி. பலவிதமான ஐயப்பாடுகளுடனும், அச்சநடுக்கத்துடனும் சென்றாலும் தங்கள் அன்புத் தெய்வத்தைத் தேடி, இனிய தூய நினைவுகளுடன் கல்லறையைப் பார்த்தனர். அளவற்ற ஏமாற்றம் அடைந்தனர். ஆனால் அங்கே ஒரு வெற்றித் தூது வானவரால் "அவர் இங்கே இல்லை. அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்..." (லூக் 24:6). கேட்டவுடன் ஆனந்தம் கொண்டனர். அனைவருக்கும் இந்நல்ல செய்தியை அறிவித்தனர்.

கிறிஸ்துவின் உயிர்ப்பு நாள் வானம் பூமிக்கு வாழ்த்துக் கூறிய ஒரு நன்நாள், ஒளியிடம் இருள் தோற்றுப் போனதை உலகத்திற்கு எடுத்துச் சொல்லுகிற பெருநாள். வீழ்ந்தோருக்கும், வறியோருக்கும் உதயம் உண்டு எனும் நம்பிக்கையை நிலைநாட்டுகின்ற திருநாள். இவ்வுலகில் ஒளிக்கும் இருளுக்கும், உண்மைக்கும் பொய்மைக்கும், நீதிக்கும் அநீதிக்கும், அன்புக்கும் அராஜகத்திற்கும் இடையே போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப் பெரும் போராட்டத்தில் ஒளியின் சக்திகளும், உண்மையின் சக்திகளும், நீதியின் சக்திகளும், அன்பின் சக்திகளும் வெற்றி பெறும் என்பதை உணர்த்தும் விழாதான் உயிர்ப்பு விழா. தீமைக்கும், பொய்மைக்கும், இருளுக்கும் வன்முறைக்கும், சாவுமணி அடிக்கும் விழாதான் உயிர்ப்பு விழா. உண்மை உறங்கும் ஆனால் ஓயாது! நீதி நசுக்கப்படும் ஆனால் நலியாது! அன்பு அழுக்கப்படும் ஆனால் அழியாது என்பதை சுட்டிக் காட்டும் விழாதான் உயிர்ப்பு விழா.

அன்று "உங்களுக்கு அமைதி உரித்தாகுக" (லூக் 24:36). என்ற இயேசுவின் வார்த்தை துயரத்தின் எல்லையை அடைந்த சீடர்களின் சோர்வுக்கும், தேய்வுக்கும் ஒரு முடிவு கண்டு உள்ளத்துக்கு அமைதியையும் மகிழ்வையும் அளித்தது. கோடிக்கு மேற்பட்ட அகதிகளின் அவல நிலையும், இயற்கையின் சீற்றமும் அதனால் ஏற்பட்ட சேதமும், கூட்டுக் கொலைகளும், கொடுமைகளும் தாண்டவமாடும் இந்நாட்களில் கிறிஸ்துவின் உயிர்ப்பு எமக்கும், அன்பு, அமைதி, நீதி ஆகிய நற்பண்புகளை அள்ளித்தரும் உயிருள்ள வார்த்தைகளை 'அளித்திட வேண்டும் என்பதே எங்களது ஆவலாக உள்ளது.

இன்று நாடு, சமூகம், மொழி, இனம், குலம், யாவும் மனிதனை மனிதனின்று பிரிக்கும் பிளவின் சின்னங்களாக காட்சியளிக்கின்றன. கிறிஸ்து அவனிக்கு அளித்த அன்பு, அமைதி, ஈகை, இரக்கம் இவை யாவும் மண்ணோடு மண்ணாய் மறைந்து விட்டனவா? என வினாக்கள் எம்மிடையே எழுகின்றன. மனிதனுடைய அறிவும் நாகரீகமும், பண்பாடும் மேம்பாடும் பல வெற்றிகளை உலகிற்கு அளித்த போதும் போரை உலகினின்று ஒழிக்கவில்லை. நாளும் துன்ப சுமைகளைச் சுமந்தவர்களாக, கவலையோடும் கண்ணீரோடும், பசியோடும் பிணியோடும் விடிவே கிடையாதா என்று சாவை நோக்கி வாழ்ந்து கொண்டிருக்கும் எங்களுக்கு இயேசுவின் உயிர்ப்பு உண்மையான விடுதலையையும் அமைதியையும் பெற்றுத் தராதா என்பதே எங்கள் ஒவ்வொருவரினதும் ஏக்கமும் எதிர்பார்ப்புமாக உள்ளது. உண்மை, நன்மை, நீதி, நேர்மை, அனைத்துமே புதைக்கப்பட்டுவிட்டன. நல்லன அனைத்தும் மடிந்துவிட்டன என்ற விரக்தியில் வாழ்வில் சோர்ந்திருக்கும் எங்களுக்கு "சோர்ந்து போகாதீர்கள், நம்பிக்கைக்கு சாவு இல்லை, உண்மை இறுதியில் வெல்லும், இதை நம்புங்கள் என்று எமக்கு மறுபடியும் உற்சாகமூட்டி நம்பிக்கை தருகிறது கிறிஸ்துவின் உயிர்ப்பு விழா.

இலட்சியவாதிகள், நல்மனம் படைத்தவர்கள், அன்புள்ளம் கொண்டவர்கள் தோல்வியை சந்திக்கலாம். ஆனால் அவை நிரந்தரமானவை அல்ல. ஒளி வரும்வரை தான இருளின் ஆட்சி. ஒளி வந்துவிட்டால் இருளுக்கு வீழ்ச்சி. தர்மத்தின் சக்திகளும், நன்மையின் சக்திகளும் இறுதியில் வெற்றி அடைவது திண்ணம். இறைமையும், மனித நேயமும் வெற்றி வாகை சூடுவது உறுதி. இதுதான் பல எதிர்பார்ப்புக்களுடன் கிறிஸ்துவின் உயிர்ப்பு விழாவை நோக்கும் எமக்கு கிறிஸ்து கூறும் பதிலாகவுள்ளது. எனவே இலட்சியவாதியை சாவு தன் சங்கிலிக்குள் வைத்திருக்க முடியாது என்பதை உணருவோம். உள்ளங்களுக்குள் ஒழிந்திருக்கிற பகைமை இருளை இயேசுவின் உயிர்ப்பு என்னும் கருணை வெளிச்சத்தால் விரட்டுவோம். கண்ணீருக்கும் கவலைகளுக்கும் இனி விடை கொடுப்போம். புதிய நம்பிக்கையோடு எமது வாழ்வில் வீறுநடை போடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்ப்புத் தரும் புது வாழ்வு

அருட்பணி
மா. றேஜிஸ் இராசநாயகம்

சிலுவையிலே அறையுண்ட அதே கிறிஸ்து மூன்றாம் நாள் உயிர் பெற்றுவிட்டார். அவருடைய உயிர்ப்பினால் உலகம் முழுவதும் புத்துயிர் பெறுகின்றது. தனக்குள் இருந்த உயிரை உலகம் புதுப்பித்துக் கொள்கிறது. கிறிஸ்துவின் உயிர்ப்பால், கிறிஸ்துவில் உயிர்ப்பில் அது நிகழ்கின்றது. கடவுளோடு ஒப்புரவான வாழ்வுதான் உயிர்ப்புத்தரும் புதுவாழ்வு! கடவுளோடு நாம் ஒப்புரவாகிவிட்டோம். முறிந்த உறவு இணைக்கப்பட்டுவிட்டது என்பதைக்காட்டும் வாழ்வுதான், கிறிஸ்துவில் நாம் வாழும் வாழ்வு நம்மில் கிறிஸ்து வாழும் வாழ்வு இதுதான் உயிர்ப்புத்தரும் புதுவாழ்வு.

### அப்போஸ்தலர்களும் புதுவாழ்வும்

"கிறிஸ்துவின் உயிர்ப்புக்கு முதன்முதலாக சான்றுபகர்ந்தவர்கள் அப்போஸ்தலர்கள். இயேசுவின் உயிர்ப்புக்குப் பின் அப்போஸ்தலர்கள் மனம் மாறுகின்றனர். கிறிஸ்துவுடன் அவர்கள் கொண்டிருந்த தொடர்பு, கிறிஸ்துவை அவர்கள் அறிந்திருந்த தன்மை மாறுகின்றது. இவ்வுலகில் அவருடன் வாழும் போது ஒரு அளவிலேதான் அப்போஸ்தலர்கள் இயேசுவைப் புரிந்து வைத்திருந்தனர். கிறிஸ்துவைப் பற்றிய அவர்களது அறிவு அதற்கு மேல் போகவில்லை. ஆனால், கிறிஸ்து உயிர்த்த பின் அவரைப் பற்றிய புது அறிவு அனைவருக்கும் கொடுக்கப்படவில்லை. அவரை விசுவசித்தவர்கள் மட்டுமே, கிறிஸ்துவின் புதுத்தன்மையை, உயிர்ப்பைப் புரிந்து கொள்ள முடிந்தது. தான் முதலில் சொல்லியவைகளின் பொருளை அவர்களுக்குத் தெளிவாக்குகின்றார்(லூக் 24:8). அவர்களது அகக் கண்களைத் திறக்கின்றார் (லூக் 24:31-35). அப் புது அறிவை முழுமைப்படுத்தும் பணியை தூய ஆவிக்கு விட்டு விடுகின்றது. அவர்களின் தன்னலம் புது சகோதரத்துவம் மலர்ந்து புதுச் சமூகம் உருவாகின்றது. (தி.ப 2:42-46).

### திருச்சபையின் புது வாழ்வு

கிறிஸ்துவின் இடத்தைத் தூய ஆவியானவர் நிரப்புவதனால் கிறிஸ்துவின் பிரிவை அப்போஸ்தலர்கள் உணர்வதில்லை. கிறிஸ்து அவர்களோடு இருப்பதாக உணர்ந்து கிறிஸ்துவில் வாழ, கிறிஸ்துவுக்காக வாழ தொடங்குகின்றனர்.

கடவுளின் திட்டப்படி புனித சின்னப்பர் தோன்றுகின்றார். கிறிஸ்துவை சந்தித்த இவர் கிறிஸ்தவ சபைகளை உருவாக்குகின்றார். "கிறிஸ்துவில் வாழ்வது" பற்றி கற்றுத்தருகின்றார்.

### கிறிஸ்துவில் வாழ்வு

"கிறிஸ்துவில்" என்ற சொற்றொடரை புனித சின்னப்பர் தெசலோனிக்கருக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்தைத் தவிர மற்ற எல்லாத் திருமுகங்களிலும் பயன்படுத்துகின்றார். கிறிஸ்துவின் உயிர்ப்பிலே நாம் கடவுளோடு ஒப்புரவாகின்றோம். கடவுளில் நாம் ஒப்புரவாவதோ கிறிஸ்துவில் இணைவதால்தான் கிறிஸ்துவில் நாம் இணையும் போது அவருடைய



உயிர்ப்பில் பங்குபெறுகிறோம். அப்போது, கிறிஸ்து நம்மில் குடிகொள்கிறார். கிறிஸ்துவின் ஆவி நம்மிலே உறைய வருகின்றார். நாம், அதனால், கிறிஸ்துவில், கிறிஸ்துவின் அன்பில், சமாதானத்தில் வாழத்தொடங்குகின்றோம்.

கிறிஸ்துவில் நாம் வாழத் தொடங்கும் போது அது புது அநுபவமாகிறது, படைப்பாகிறது. நம்மில் கிறிஸ்து வாழ்கிறார். இவ்வாழ்வைத்தான் புனித சின்னப்பர் "புது படைப்பு" "புது வாழ்வு" என்று கூறுகின்றார் "ஒருவன் கிறிஸ்துக்குள் வாழ்ந்தால், புதியதொரு படைப்பாகிவிட்டான் பழையன கழிந்தன இதோ புதியன தோன்றியுள்ளன. (2 கொரி 5:17).

### கிறிஸ்துவில் வாழ்வதால் வரும் விளைவுகள்

புதிய வாழ்வு என்பது நாம் கிறிஸ்துவில் கிறிஸ்துவோடு வாழும் வாழ்க்கையாகும். இப் புதுவாழ்வு நம்மைப் புது மனிதர்களாக்கி, நம்மிலே பல மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. நம்முடைய இயல்பிலே, இயற்கையிலே, வாழ்விலே, வாழும் வழிகளிலே இப் புதுவாழ்வு ஊடுருவுகின்றது.

### புதிய இனம்

கிறிஸ்துவோடு நாம் புதிய வாழ்வு தொடங்கும் போது அவரிலே முற்றிலும் உறைந்து விடுகிறோம். நம்முடைய உணர்வுகளெல்லாம் அவரில் ஒன்றிக்கின்றன. நாம் அனைவரும் கிறிஸ்துவில் இணையும் போது, புதிய இனமாகின்றோம். புதிய குலம் ஆகின்றோம். புதிய குலமாக உருப்பெறுவதால் நம்மிடையே முன்பிருந்த வேறுபாடுகள் மறைந்தே ஆகவேண்டும். கிறிஸ்துவிலே புதுவாழ்வு வாழத் தொடங்குவதால் புதிய படைப்பாகின்றோம்.

### இறைவனின் மக்கள்

கிறிஸ்துவில் இணைந்த நாம் அனைவரும் கடவுளின் மக்கள் ஆகின்றோம். "அப்பா" என்று கடவுளை அழைக்கும் உரிமையைப் பெற்றவர்களாகின்றோம். இந்த உரிமைக்குக் காரணம் தூய ஆவியே. (உரோ 8:15).

### சாவிலிருந்தும் சட்டத்திலிருந்தும் விடுதலை

கிறிஸ்து தனது உயிர்ப்பால் சாவினை வென்று அதன் ஆதிக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கின்றார். அதுமட்டுமன்றி, மோயீசன் சட்டத்தின் துணைகொண்டு பரிசேயர் ஏற்படுத்திய வெளிவேடங்களிலிருந்தும், ஆசாரங்களிலிருந்தும் நாம் விடுதலை பெற்றுள்ளோம். அன்பு ஒன்றுதான் அவர் கொடுத்த கட்டளை! சட்டம்!!

### மனமாற்றம்

எவ்வாறு கிறிஸ்துவின் மனித அவதாரம் நம்மிலே மாற்றத்தை, திருப்பத்தை ஆசிக்கிறதோ, அவ்வாறே, உயிர்ப்பும் எதிர்நோக்குகிறது. இந்த மனமாற்றம் மனிதனின் உள்ளத்தை அடிப்படையாகக் கொண்டது. எனவே, இந்த மனமாற்றம் அவனது ஆன்ம, பொருளாதார, சமூக வாழ்விலே மாற்றத்தைக் காண்பிக்க வேண்டும்.

### தூய்மை

மனமாற்றம் ஒரு பொழுதும் மனிதனால் நிகழ்வதில்லை. அதற்கு ஆண்டவரின் அருள் தேவை. அந்த அருளின் உதவியால் தான் புதுவாழ்வு நிலை நிற்க முடியும். விசுவாசிப்போர் அனைவரும் ஒரு வகையில் தூயவர்கள்! புனிதர்கள்! (உரோ 2:7) "அவர்கள் உண்மையினால் உமக்கு உரியவர் ஆகும்படி அவர்களுக்காக என்னையே அர்ப்பணமாக்குகிறேன்" (யோவான் 17:19).

### மகிழ்ச்சி

உயிர்ப்பின் மற்றொரு முக்கிய கொடை மகிழ்ச்சியாகும். கிறிஸ்தவன் வாழவேண்டிய புதுவாழ்வின் ஒரு அவசியமான தன்மையும் மகிழ்ச்சிதான். கிறிஸ்தவனுடைய மகிழ்ச்சி அவனைப் புது மனிதனாகக் காட்டுகிறது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் மகிழ்ச்சியுள்ளவனாகவே வாழ்ந்தாக வேண்டும். கிறிஸ்தவர்கள் இருக்குமிடத்து மகிழ்ச்சி தெரியவேண்டும். "மகிழ்ச்சியாய் இருங்கள்! இடைவிடாது செபியுங்கள்! நன்றி கூறுங்கள்!" (1 தெசலோ 5:14). "ஆண்டவரில் அகமகிழுங்கள்! மீண்டும் கூறுகிறேன். அகமகிழுங்கள். காரணம் ஆண்டவர் அண்மையிலுள்ளார்" (பிலிப்பி 4:4) எனவே, மகிழ்ச்சியுடன் நாம் புதுவாழ்வை ஆரம்பிப்போம். புதுவாழ்வில் திளைத்திடுவோம்.

# இறைஇரக்கப் பெருவிழா

இறை இரக்கத்தின் ஆண்டவர் நாமத்தில் வாழ்த்துக்கள். உயிர்ப்பு ஞாயிறை அடுத்து வரும் ஞாயிறன்று (சித்திரை 11) நாம் கொண்டாடும் இறை இரக்கப் பெருவிழாவினையும், பக்திமுயற்சியையும் இலங்கையில் முதன்முதலாக (மரியாயின் சேனை போன்று) விதைத்து, பல்கிப் பெருகிடக் காரணமாயிருந்தவர், (அதுவும் மிகவும் பின் தங்கிய கிராமமான அரியாலையில்) முன்னாள் அரியாலை வாசியும், இன்னாள் கனடா வாசியுமான திரு.மக்ஸ்.ஆர்.பிரான்சிஸ் என்பவராகும்.

இரக்கத்தின் ஆண்டவர் எளியவர்களின் வழியாக எவ்வாறு தம்மை உலகிற்கு வெளிப்படுத்திக் கொண்டார் என்பதற்கு சகோதரி பவுஸ்தீனாவே மூலகாரணம். தம் வெறுமையிலும், வறுமையிலும் கொடிய நோயின் கோரப் பிடியிலும் துன்பப்பட்டாலும், இறை இரக்கத்தின் ஆண்டவருடைய மகிமைக்கு அற்புத சாட்சியானார்.

இன்று நம் திருச்சபையிலே அனேகமான பக்தி முயற்சிகள் வளர்ந்து, வாழ்ந்து கொண்டே வருகின்றன. இதே போன்று இறை இரக்கப் பக்தி முயற்சியுமாகும். பாவிகளுக்கு தமது நித்திய அன்பினை ஏற்படுத்த, ஆண்டவர் அடியார்களுக்கு முன்வந்தார். அவர் கருவியாக உருவானவரே சகோதரி பவுஸ்தீனா கோவாஸ்கா.

இவரிடம் இப்பக்தி முயற்சியினைப் பரப்பும் பணி விசேடமாக ஒப்புவிக்கப்பட்டது. இயேசு, ஒரு சாதாரண அருட்சகோதரியை தமது அப்போஸ்தலர் என அழைத்து, தம் திட்டத்தினை அடிக்கடி திருக்காட்சிகள் மூலம், தமது அப்போஸ்தலர் என அழைத்து அவரை தமது செயலர் எனவும், தேர்ந்து கொண்டு அனைத்து உண்மைகளையும், தான் கூறியவாறே ஒன்றும் விடாமல் எழுதும் படி பணித்ததையும் சகோதரி பவுஸ்தீனாவின் நாட்குறிப்புக்கள் தெளிவுபடுத்துகின்றன.

இச்சூழ்நிலையிலே ஆண்டவரின் புதிய மீட்புத் திட்டத்தின்படி அவரது பேரிரக்கத்தின் மீது பெரு நம்பிக்கை கொண்டு அவர் சொல்லிக் கொடுத்த செபமாலையின் துணையோடு அவரது புதிய கதிர் ஒளி வீசும் திரு உருவத்தினை வைத்து வணங்கி, வழிபட்டு ஒரு திருவிழா எடுக்குமாறும் செய்தி விடுக்கப்பட்டது. இச்செய்தியே ஆண்டவர் இயேசு இறுதிக்காலத் தீர்ப்புக்கு முன் இரக்கம் காட்டி விடுக்கும் ஒருபுதிய திருவெளிப்பாடு.

இதனை நாம் சரிவர அறிந்து கொள்ள வேண்டுமானால் ஹெலனாகப் பிறந்து, சகோதரி பவுஸ்தீனாவாக வாழ்ந்து, பிற்காலத்தில் புனித பவுஸ்தீனாவாக நம் திருச்சபையால் உயர்த்தப்பட்ட இத்திருத்தொண்டர் பற்றிய வாழ்க்கை மிகவும் குறிப்பிடத்தக்கது.

சகோ. பவுஸ்தீனாவுக்கு வெளிப்படுத்தப்பட்ட திருக்காட்சியில், மனித இனத்திற்கென்றே இறைவனால் அருளிக்கப்பட்ட இறைபக்தி, அவரது தெய்வீக இரக்கத்தின் சாட்சியாகும். இத்தகைய காட்சிகள் மூலமே சகோ. பவுஸ்தீனா ஆண்டவரிடம் நம்பிக்கை பெற்ற இறைபக்திக் காப்பாளராகவும், கனிவின் செயலராகவும், இறைவாக்குகள் உரைக்க அனுப்பப்பட்ட இறைத் தூதுவராகவும், இக்காட்சிகளினால் தெரிந்து கொள்ளப்பட்டார்.

இதன் சாட்சியாக, ஒருநாள் மாலை சகோ. பவுஸ்தீனாவின் அறையிலே ஆண்டவர் இயேசு மிகவும் அற்புதமாகக் காட்சி அளித்தார். அதாவது, தூய வெண்ணிற ஆடைதரித்தவராக, ஆசி வழங்கும் தோரணையில் ஒரு கரமும், இடது மார்பின் இதயப்பகுதியின் மேல் மறுகரமும் வைத்துக் காட்சியளித்தார். அவரது மார்புப் பகுதியிலிருந்து பொங்கிப் பெருக்கெடுக்கும் இருவேறு நீண்ட கதிர்கள் சிவப்பு, வெண்சாம்பல் நிறங்களில் வெளிப்பட்டுக் கொண்டிருந்தன.

அவர் கூறியதாவது:- "நீ எவ்வாறு என்னைக் காண்கிறாயோ அதே போன்ற தோற்றத்தில் என் உருவத்தை வரைந்து, அதன் கீழ், 'இயேசுவே, நான் உம்மில் நம்பிக்கை வைக்கின்றேன்' என்று எழுது. இந்த உருவப்படத்தை முதலில் உன் சிற்றாலயத்திலும், பின்னர் இவ்வுலகம் முழுவதுமே வணங்கப்படவேண்டும் என்பது என் விருப்பம்" என்றார்.

'இந்த உருவப்படத்தை வணங்கும் எந்த ஆன்மாவும் அழியாது என்று ஆணையிடுகின்றேன். இவ்வுலகில் ஏற்கனவே உள்ள எதிரிகளை அது வெற்றி கொள்ளும் என்பதுடன் முக்கியமாகச் சாகும் தறுவாயில் மீட்பளிக்கும் என்றும் வாக்களிக்கின்றேன். இதனை

(8ம் பக்கம் பார்க்க...)

# வெறுமையான கல்லறை (யோவான் 21:1-8)

இயேசு கிறிஸ்துவின் வரலாற்றுக்கு ஒரு புதுமையும் திருப்பமும் தருவது அவரது உயிர்ப்பு. உயிர்ப்பு பற்றிய உண்மையை இயேசுவின் சாட்சிகள் நமக்கு எடுத்துச் சொல்கின்றன. உயிர்த்த இயேசுவின் சாட்சிகள் ஆதித் திருச்சபையில் பரவலாகப் பேசப்பட்டு ஆழ்ந்த பாதிப்பை ஏற்படுத்தின என்பது மறக்கவியலாதது. இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குச் சாட்சியங்களாக புனித நூற்களையும், உயிர்த்த இயேசுவின் சாட்சிகளையும் ஆதாரமாக்குகிறார் புனித பவுல்.

காலத்தால் முக்கிய திருச்சபையின் பாரம்பரியத்தையும் உயிர்த்த சாட்சிகளையும் எடுத்துக்கூறி இயேசுவின் உயிர்ப்பை நிலைநாட்டிய பெருமை பவுலைச் சாரும் (1 கொரி 15:3-8) "நான் பெற்றுக்கொண்டதும் முதன்மையானது எனக்கருதி உங்களிடம் ஒப்படைத்ததும் இதுவே. மறைநூலில் எழுதியுள்ளவாறு கிறிஸ்து நம் பாவங்களுக்காக இறந்து, அடக்கம் செய்யப்பட்டார். மறைநூலில் எழுதியுள்ளவாறே மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்பட்டார். பின்னர் அவர் கேபா(பேதுரு)வுக்கும் அதன்பின் பன்னிருவருக்கும் தோன்றினார். பின்பு ஐந்நூறுக்கு மேற்பட்ட சகோதர, சகோதரிகளுக்கும் ஒரே நேரத்தில் தோன்றினார்.... பிறகு யாக்கோபுக்கும் அதன்பின் திருத்தூதர் அனைவருக்கும் தோன்றினார். எல்லாருக்கும் கடைசியில் காலம் தப்பிப் பிறந்த குழந்தைபோன்ற எனக்கும் தோன்றினார்" என்று காண்கிறோம்.

### நற்செய்தியில் உயிர்ப்பு

நற்செய்திகள் இயேசுவின் உயிர்ப்பு நிகழ்ச்சியை அப்படியே படம்பிடித்துக் காட்டவில்லை. எப்படி இறந்த உடலுக்கு உயிர் வந்தது, எப்படி எழுந்து கல்லறையிலிருந்து இயேசு வெளியே வந்தார் என்பது கூறப்படவில்லை (பேதுருவின் நற்செய்தி 39-42 இதை விவரிக்கிறது). புதிய ஏற்பாடு உயிர்ப்பை ஒரு விசுவாச சத்தியமாகப் பறைசாற்றுகிறது. இயேசுவின் உயிர்ப்பை சாவின் மீதுள்ள வெற்றியாகப் பார்க்கிறது.

மற்றபடி ரெய்மண்ட் பிரௌன் என்ற விவிலிய அறிஞர் உயிர்ப்பு பற்றிக் கூறும் விவிலிய இலக்கியங்களை இரண்டாகப் பிரிக்கிறார். அவை

1. திருச்சபையின் மறைக்கல்வி, போதனை, வழிபாடுகளில் காணக்கிடைக்கும் விசுவாச அறிக்கை (1கொரி 15:3-8, உரோ 1:4, மாற் 8:31).
2. நற்செய்திகள், திருத்தூதர் பணிகளில் காணப்படும் இயேசுவின் சாட்சிகள், வெறுமையான கல்லறை பற்றிய நற்செய்தி கூறும் செய்திகள்.

### வெறுமையான கல்லறைப் பாரம்பரியம்

வெறுமையான கல்லறை பற்றி கூறும் நான்கு நற்செய்திகளும் ஒத்திருப்பதை நாம் காணமுடிகிறது (மாற் 16:1-8, மத் 28:1-8, லூக் 24:1-12, யோவா 21:1-10).

(7ம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க பாதிரிமாரின் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் மன்னிப்புக் கோரினார் பாப்பரசர்

அயர்லாந்தின் கத்தோலிக்க பாதிரிமாரால் பாலியல் துஷ்பிர ஆயாகத்திற்கு உள்ளாக்கப் பட்டவர்களிடம் பரிசுத்த பாப்பரசர் 16ம் பெனடிக்ற் மன்னிப்புக் கோரியுள்ளார்.

அயர்லாந்திலுள்ள கத்தோலிக்கர்களுக்கு பாப்பரசர் எழுதியுள்ள கடிதத்தில் துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் நம்பிக்கைத்துரோகம் இழைக்கப்பட்டிருக்கிறது என்பதைத்தான் ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்துள்ளார்

அத்துடன், இக்குற்றச்சாட்டுக்களைக் கையாள்வதில் அயர்லாந்தின் திருச்சபைத்தலைவர்கள் கடுமையான தவறை இழைத்திருப்பதாகக் குற்றஞ்சாட்டியுள்ளதுடன், நம்பிக்கையை நிலைநாட்ட இந்த விடயத்தில் வத்திக்கான் நேரடியாகத்தலையிடும் என்று கூறியுள்ளார்.

சிறுவர் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுத் தொடர்பில் வத்திக்கானால் வெளியிடப்படும் கத்தோலிக்கர்களுக்கான முதலாவது அறிக்கை இதுவாகும்.

அதேவேளை, அயர்லாந்தை விட ஜேர்மனி, சுவிற்ஸர்லாந்து, நெதர்லாந்து, ஆஸ்திரியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளிலும் பாதிரிமார்களால் சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில், துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பாப்பரசர் எழுதியுள்ள கடி



தத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது; நீங்கள் அனுபவித்துள்ள மிக மோசமான துன்பங்களுக்காக நான் உண்மையில் மன்னிப்புக் கோருகின்றேன். உங்களது நம்பிக்கைக்கு துரோகம் இழைக்கப்பட்டிருக்கிறது. உங்களது கௌரவம் பாதிப்பிற்குள்ளாகியுள்ளது. இவ்விவகாரம் நம் அனைவரையும் படவைத்திருக்கிறது என்பதை நான் பகிரங்கமாகக் கூறுகின்றேன்.

இக்குற்றத்தை அழைத்தவர்கள் கடவுளுக்கு பதில்கூறியாக வேண்டும். இந்த பாவகரமான செயல்களுக்கு அவர்கள் முறையான தண்டனையை அனுபவிப்பார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

# மயிலிட்டி காணிக்கை அன்னை ஆலயத்தில் நீண்ட கால இடைவெளிக்குப்பின் திருப்பலி இடம்பெற்றது

முப்பது வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக இடம்பெற்ற யுத்த சூழலால் நீண்ட காலமாக பூஜைகள் நடைபெறாமல் கைவிடப்பட்டிருந்த வரலாற்று புகழ்மிக்க மயிலிட்டி காணிக்கை அன்னை ஆலயத்தில் திருப்பலிப்பூசைகள் நடைபெற்றுள்ளன.

யாழ். பாதுகாப்புப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் எம். ஹத்துருசிங்கவின் ஆலோசனையின் பேரில் இந்த தலைமையக பிரதம அதிகாரி பிகேடியர் பிசிஜே ஏஎஸ் ரொட்ரிகோவின் மேற்பார்வையில் உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் அமைந்திருக்கும் படைப் பிரிவுகளின் இராணுவவீரர்களினதும் அப்பகுதி பொதுமக்களினதும் ஒத்துழைப்புடன் குறுகிய காலத்தில் சிரமதானப்பணியொன்று மேற்கொள்ளப்பட்டு நேற்று முன்தினம் மிகக்கோலாகலமாக அங்கு திருப்பலிப்பூசைகள் நடத்தப்பட்டதாக யாழ். பாதுகாப்புப் படைகளின் தலைமையகம் அனுப்பி வைத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

வரலாற்றுப் புகழ்மிக்க இந்த ஆலயம் 300 வருடங்களுக்கு முன்னர் போர்த்துக்கேயரால் கிறிஸ தவ மதத்தை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்காக மயிலிட்டி பிரதேசத்தில் நிறுவப்பட்டுள்ளது. ஒல்லாந்தர் இந்த ஆலயத்தை அழித்துக் கத்தோலிக்க மதத்தை மக்களிடமிருந்து தூர விலக்க முற்பட்டனர் அவர்களின் முயற்சி சிறிது காலம் தொடர்ந்தாலும் ஆங்கிலேயரின் வருகையைத்தொடர்நது யாழ்ப்பாணத்தில் பல்வேறு பிரதேசங்களிலும் வாழ்ந்து வந்த கிறிஸ்தவ மக்கள் இங்கு மெழுகுவர்த்தி ஊர்வலமொன்றை நடத்தி மீண்டும் வழிபாடுகளை மேற்கொண்டனர். கொடுர பயங்கரவாதத்தின் அச்சுறுத்தலால் யாழ். பிரதேசத்தில் பல அழிவுகள் ஆரம்பமாகின. இக்காலகட்டத்தில் இவ்வாலயத்தில் பூஜைகள் நடைபெறுவது மீண்டும் தடைப்பட்டதுடன் ஆலயம் அழிவுக்கும் உள்ளானது.

சமாதானத்தைத் தொடர்ந்து யாழ். குடாநாடு பூராகவும் கிறிஸ்தவம் மீண்டும் புதுப்பொழிவு பெற்று வருவதுடன் அதன் பிரதிபலனாக கடந்த 12 வருட காலமாக பூஜைகள் நடைபெறாது கைவிடப்பட்டிருந்த இவ்வாலயத்தை சீரமைத்து முதல் முறையாக நடத்தப்பட்ட திருப்பலி பூஜை

(7ம் பக்கம் பார்க்க...)

# வெள்ளம் இசைத்தட்டு வெளியீடு




யாழ் மறைமாவட்ட குருவாகிய அருட்பணி. M.L. தயாகரன் அவர்களின் மூன்றாவது வெளியீடாகிய வெள்ளம் இசைத்ட்டு வெளியீட்டு விழா கடந்த 23.03.2010 அன்று திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு யாழ மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் வெளியீட்டு வைக்கப்பட்டது. ''வென்றவன்'' என்ற ஒலிச் சித்திர விவரண படத்தையும் ''தாயொடுதந்தை'' என்ற இசைத்தட்டையும் ஏற்கனவே வெளியிட்டவர் இவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# வெள்ளியில் ஞாயிறு திருப்பாடுகளின் காட்சி

வெள்ளியில் ஞாயிறு திருப்பாடுகளின் காட்சி 22ம் திகதி தொடக்கம் 28ம் திகதி வரை யாழ் திருமறைக்கலாமன்றத்தால் ஆண்டு தோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் பிரமாண்டான ஆற்றுகையான இயேசுவின் பாடுகள், மரணம் உயிர்ப்பினைச் சித்தரிக்கும் திருப்பாடுகளின் காட்சி இம்முறை ''வெள்ளியில் ஞாயிறு'' என்னும் பெயரில் நடைபெற்றது.

# காவலனின் அடுத்த இல்லத்தரிசிப்பு

காவலனின் அடுத்த இல்லத்தரிசிப்பு ஏப்பிரல் 18ம் திகதி உங்களது கரங்களை வந்தடையும் என்பதை அறிவித்துக் கொள்கின்றோம். உங்கள் ஒத்துழைப்பு எமது நன்றிகள். தொடர்ந்து உங்கள ஆக்கங்களை எமக்கு நேர காலத்தோடு அனுப்பி ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்

# மண்டைதீவு பங்கில் உறுதிப்பூசுதல்



கடந்த 13.03.2010 ஆண்டு மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலணத்தில் யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் 49 பிள்ளைகளுக்கு உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கப்பட்டது. இவ்வருட்சாதனத்திற்கான அனைத்து ஆயத்த ஒழுங்கு களை பங்குத்தந்தை அருட்பணி. போல் றொகான் சிந்த முறையில் ஆயத்தம் செய்தார்.

# யாழ் அமலமரித் தியாகிகள் சபைக்கு புதிய குருக்கள்

இறையழைப்பை ஏற்று பணிகுருத்துவத்தில் பங்கேற்கும் அருட்சகோதரர்கள் மே.அ. கியூபேட் அமதி, யோ. யோண்பற்றிக் அமதி, இ.செ. விஜேந்திரன் அமதி, தா.ஆ. றெஜிக்குமார் அமதி, யோ. றாஜ் கிளேயர் அமதி சித்திரைத் திங்கள் 12ம் நாள் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ் மரியன்னை பேராலயத்தில் யாழ் ஆயர் பேரருட்திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்படவுள்ளனர்.

இவர்களின் பணிவாழ்வு சிறக்க பாதுகாவலனின் செபங்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதிலும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

# கல்வாரியில் கருணை மழை

மன்னார் மறைமாவட்ட அதி வந்த னைக்குரிய ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் ஆசீ ருடன் பேராலயப் பங்குத்தந்தை அருட்திரு தேவராஜா அடிகளாரு டன் பேராலய சமூகம் இணைந்து வழங்கிய பிரமாண்டமான படைப்பு கல்வாரியில் கருணை மழையாகும்.

மன்னார். புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி மைதானத்தில் 28.03.2010 ஞாயிறு தினம் மாலை 7.00 மணிக்கு இரட்சணிய வரலாற்றில் இயேசுவின் திருப்பாடுகள் வரலாற்று ஆற்றுகை நடை பெற்றது.

கதை, வசனம், பாடல், இசை, நெறியாள்கை கலைஞர் N.M. பாலச்சந்திரன் என்பது குறிப் பிடத்தக்கது.

# பதுவைப் புனித அந்தோனியாரின் அழியாத இதயம்





கோடி அற்புதரென பெயர் பெற்ற புனித அந்தோனியாரின் அழியாத இதயம் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டது. எமது யாழ் மறைமாவட்டத்திற்கு அவ்விதயம் வணக்கத்திற்காக கொண்டு வரப்பட்டது. பங்குனி 13ம்திகதி காலை யாழ் பலாலிக்கு உலங்கு வானூர்தி மூலம் கொண்டு வரப்பட்டது. அன்று காலை மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் மக்கள் வணக்கத்திற்காக வைக்கப்பட்டு பின்னர் 3.00 மணியளவில் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு பிரதான வீதியூடாக எடுத்துச் செல்லப்பட்டது. பல்லாயிரக்கணக்கான மக்கள் புனிதரின் அழியாத இதயத்திற்கு வணக்கம் செலுத்த நீண்ட வரிசையில் பல மணி நேரம் காத்திருந்து புனிதருடைய திருப்பண்டத்தை தரிசித்தார்கள். சிறுவர் தொடங்கி



முதியோர் வரை பொறுமையோடு காத்திருந்து மேற்கொளளப்பட்ட ஒழுங்குகளைக் கடைப்பிடித்து மிகவும் பக்திபூர்வமாக இந்நிகழ்வில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்விற்கு அனைத்துக் குருக்களும், கன்னியர்களும், துறவிகளும் முழு ஒத்துழைப்பையும் வழங்கி இந்நிகழ்வை சிறப்பித்தார்கள்.

# யாழ் மறைமாவட்ட குருக்களின் தவக்காலத் தியானம்

வருடா வருடம் நடைபெறும் யாழ் மறைமாவட்ட குருக்களின் தவக்கால ஒரு நாள் தியானம் பண்டத்தரிப்பு பத்திமா அன்னை யாத்திரை ஸ்தலத்தில் 25.03.2010 ஆண்டு நடைபெற்றது. அருட்தந்தை றேஜிஸ் இராஜநாயகம் அவர்களின் வழிநடத்துதலில், அர்ப்பணம் என்ற தொனிப்பொருளில் சிந்தனை கொடுக்கப்பட்டது. அர்ப்பணத்தைப் பற்றிய சிந்தனையை வெவ்வேறு கோணங்களிலிருந்து சிந்திக்க கூடியதாக அருட்தந்தையர்களுடைய உரை அமைந்திருந்தது. இத்தியானத்தை யாழ் மறைமாவட்ட குருக்கள் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடிவு காட்டும் புனித வெள்ளி

குவலயத்தை படைத்தான் பரமன்
மக்கள் பாவத்தில் வீழ்ந்தனர்
மீட்க நினைத்தான் மானிலத்தை
மனையும் அனுப்பினான் புவியில்

வந்த மகன் தொடங்கினார் பணியை
தடைகள் வந்ததும் தடுத்தார்
தயவால் நேசித்தார் பாவியரை
மன்னிப்பும் அளித்தார் அப்பொழுதே

சதியர்கள் என்னும் பேர்வழிகளால்
இயேசுவுக்கு கொடுக்கப்பட்டது சிலுவை
கல்வாரியில் புனித பயணம்
சிலுவையோடு ஒரு மனிதன்

தாங்கமுடியாமல் தள்ளாடினார்
ஆனாலும் சுமந்தார் சிலுவையை
சிலுவையில் அறைந்தனர் இயேசுவை
நமக்காக அதையும் தாங்கினார்

வெள்ளியின் மாலை நேரம்
மூன்று மணியைத் தொட்டது கடிகாரம்
எல்லாம் முடிந்தது நிறைவுடன்
நேசரும் மடிந்தார் சிலுவையில்

அந்த வெள்ளி அன்று முதல்
நமக்கு புனித வெள்ளி
மாபரன் மடிந்த வெள்ளி
அமைதியின் அற்புத வெள்ளி அதுவே
விடிவு காட்டும் பெரிய வெள்ளியுமாம்

லீ. லின்ரா சாந்தினி, சாவகச்சேரிப் பங்கு.

# ஏடுபோற்றும் அந்தோனியே!



கொள்ளை நோய் கொடிய ஆட்சி
தொல்லை தரும் சமூக வாழ்வு
சொல் லொணாப் பகை உணர்வு
எல்லாமே உம் பதம் தனிலே
கோடான கோடி மக்கள் அவர்
கொட்டி விடும் துன்பம் எல்லாம்
நாடோறும் போக்கி நிற்கும்
ஏடு போற்றும் அந்தோனியே!
பாடுகளால் பாரை மீட்ட
பரலோக மைந்தன் இயேசை!
நாடியே நாமும் வாழ
ஓடி வந்து துணை புரிவீர்!

சு. அடைக்கலம் (தமிழமுதன்)

## மயிலிட்டி காணிக்கை அன்னை... (6ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 20ம் திகதி யாழ் பாது காப்புப்படைகளின் தளபதியை பிரதிநிதித்துவப்படுத்தி இத்தலைமையக பிரதம அதிகாரி பிரிகேடியர் பிசிஜேஏஎஸ் ரொட்றிகோ உட்பட உயர் இராணுவ அதிகாரிகள் மற்றும் வீரர்களினதும் பிரதேச வாழ் சுமார் இரண்டாயிரம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கிறிஸ்தவ பக்தர்களினது பங்குபற்றலுடன் நடைபெற்றது.

இவ்வுற்சவம் யாழ். கிறிஸ்தவ சபையின் அருட்திரு ஜஸ்டின் அடிகளார் உட்பட பிரதான பங்குத்தந்தைகளின் தலைமையில் நடைபெற்றதுடன் இதில் கலந்து கொண்ட அடியார்களுக்கு பிரதேச வாழ் கொடையாளர்களால் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன. இவ்வைபவத்தை சிறப்பாக நடத்தி முடிப்பதற்கு இராணுவத்தினர் தேவையான அடிப்படை வசதிகளை மேற்கொண்டதுடன் பங்குத்தந்தைகளும் அடியார்களும் இந் நடவடிக்கைக்கு தமது நன்றியை தெரிவித்தனர்.

## மல்வம் பங்கின் இளையோரை வாழ்த்துகின்றோம்

**யாழ் மறைமாவட்டத்தில் நடாத்தப்பட்ட இளையோருக்கான போட்டிகளில் மல்வம் பங்கு இளையோர் பங்கெடுத்து சிறப்புற விளையாடி வெற்றி பெற்றுள்ளனர்.**

**இளவாலை மறைக்கோட்டம்**

- ★ கிளித்தட்டு 1ம் இடம்
- ★ நாடகம் 3ம் இடம்
- ★ சஞ்சிகை ஆக்கம் 3ம் இடம்
- ★ கரப்பந்தாட்டம் 1ம் இடம்
- ★ குழுப்பாடல் 3ம் இடம்

**யாழ் மறைமாவட்டம்**

★ கிளித்தட்டு 1ம் இடம் ★ கரப்பந்து 1ம் இடம்

மேற்படி போட்டிகளில் வெற்றியீட்டிய மல்வம் திருக்குடும்ப ஆலயம், உடுவில் தூய செபமாலை அன்னை ஆலய இளையோரையும் இவர்களை நெறிப்படுத்திய பங்குத்தந்தை அருட்பணி சாள்ஸ் யஸ்ரின் அடிகளாரையும் பங்குமக்களாகிய நாம் வாழ்த்துகின்றோம்.

# வெறுமையான கல்லறை... (5ம் பக்கத் தொடர்ச்சி)

காலிக் கல்லறை பற்றிய மூலங்கள் பிற்காலத்தவை என்று அறிஞர்கள் கருதுகின்றனர். ஏனெனில் திருச்சபையின் பழமையான உயிர்ப்பு பற்றிய விசுவாச அறிக்கைகளில் (திப 2:23-24, 4:10, 5:30,31 10:39-40) இயேசுவின் சிலுவை இறப்பும் கடவுள் அவரை உயிர்த்தெழச் செய்ததும் கூறப்படுகின்றன. காலியான கல்லறை பற்றி எந்த செய்தியுமில்லை. சிலர் இதை கதை சொல்வது போலுள்ளது அல்லது உயிர்ப்பு பற்றிய தப்பறைகளை எதிர்கொள்ள எழுதப்பட்டவை என்கின்றனர்.

ஆனால், மூல், வில்கென்ஸ் போன்ற அறிஞர்கள் இதை ஏற்றுக்கொள்வதில்லை. இவர்களது கருத்துப்படி இயேசுவின் உடலோ, எலும்புக்கூடோ கல்லறையிலிருந்தால் எப்படி இயேசு சாவை வென்று சாவிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்ற அறிக்கையும் போதனையும் பிறந்திருக்க முடியும்? மேலும், உயிர்த்தெழல் எதிர்ப்புக் கொள்கைகளுக்கு அளித்த பதிலில் உடல் கல்லறையில் இருந்தது என்பது கூறப்படவே இல்லை.

புல்லர் என்ற அறிஞர் "அடக்கத்திற்கு முன்னால் சாவு எப்படி உண்மையோ அவ்வாறே இயேசுவின் சாட்சிகளுக்கு முன்னால் இயேசு உயிர்த்தார் என்பதை ஆதிக் கிறித்தவர்கள் விசுவசித்தார்கள்" என்பதில் ஆழ்ந்த உண்மை இருக்கிறது. இதற்கும் வெறுமையான கல்லறைக்கும் கண்டிப்பாகத் தொடர்புள்ளது.

மேலும் பவுல், இயேசு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் என்பது வெறுமையான கல்லறையை வலியுறுத்துகிறது.

எனவே, கல்லறைக்குச் சென்ற மரிய மதலேனாளும் மற்ற பெண்களும் கல்லறை வெறுமையாக இருந்ததைக் கண்டார்கள் என்ற பாரம்பரியமானது பிந்தியது அல்ல எனலாம்.

### வெறுமைக் கல்லறை விசுவாசம்

யோவான் நற்செய்தி வாரத்தின் முதல் நாள் (ஞாயிறு) இருள் அகலும் முன்பே மரிய மகதலா கல்லறைக்கு வந்ததைச் சுட்டிக் காட்டுகிறது. கல்லறை வாயிலிருந்த கல் அகற்றப்பட்டிருப்பதைக் கண்டு சீமோன் பேதுருவிடமும் இயேசுவின் அன்புச் சீடரிடமும் "ஆண்டவரை எடுத்துக்கொண்டு போய்விட்டனர் (யோவா 20:2) என்றபோது பேதுருவும் மற்ற சீடரும் கல்லறைக்கு வருகின்றனர். இருவரும துணிகளைக் கல்லறையில் காண்கின்றனர். பேதுருவுக்குத் துணிகளைக் கண்டும் எந்த விளைவும் ஏற்படவில்லை. ஆனால் மற்ற சீடர்(யோவான்) சென்றார், கண்டார், நம்பினார்.

இங்கு யோவான் நம்பினார் என்பது கண்டதோடு தொடர்புடையது. காணலும் நம்புதலும் வரும் போது யோவான் இடெய்ன் (Eidein) என்ற கிரேக்கச் சொல்லை காணலுக்குப் பயன்படுத்துகிறார். காணலுக்கு பிளெபெய்ன் (Blepein), தெயோரெய்ன் என்ற சொற்களையே யோவான் 5,6 வசனங்களில் முறையே காணலாம். இங்கு இடெய்ன் என்ற சொல் விசுவாசத்தோடு மிக நெருக்கமானது என்பது தெளிவு.

பேதுருவையும் (விசுவாசம் இல்லை) யோவானையும் (விசுவசித்தார்) காட்டி இருவருக்குமுள்ள வேறுபாட்டைக் கூற ஆசிரியருக்கு விருப்பமில்லை. ஏனெனில் பேதுருவும் யோவானும் எப்போதும் நண்பர்களாக ஒருவருக்கொருவர் உதவுபவராகவும் புதிய ஏற்பாடு சித்தரிக்கிறது.

எனினும் இயேசு நேசித்த யோவான் ஓர் எடுத்துக்காட்டான இயேசுவின் சீடர் என்பது சித்தரிக்கப்படுகிறது.

### யோவானின் உயிர்த்த இயேசுவில் விசுவாசம்

யோவான் கண்டார், நம்பினார், பேதுரு கண்டார் ஆனால் நம்பினார் என்பது கூறப்படவில்லை. இதற்கும் யோவா 21:4, 7-ல் திபேரியா கடற்கரையில் நின்றுகொண்டிருந்த உயிர்த்த இயேசுவை "அவரே ஆண்டவர்" என்பதை உடனே அடையாளம் கண்டு பேதுருவுக்குக் கூறியதற்கும் ஒத்திருப்பதைக் காணலாம்.

கல்லறையில் உயிர்த்த இயேசுவின் மீது விசுவாசம் (கொண்ட யோவான்) தோமாவுக்கு 22:29b இயேசு கூறிய வாக்கு "காணாமல் நம்புவோர் பேறுபெற்றோர்" என்பதற்கு முன் தயாரிப்பு என்பர் சிலர். யோவான் உயிர்த்த இயேசுவைக் காணாமலே நம்பினார். சில அறிஞர்கள் இதைச் சான்றாகக் காட்டி யோவான் நற்செய்தியாளர் காட்சிகளைக்கண்டு எழுகின்ற விசுவாசத்தைக் குறைவாகக் கருதுகிறார் என்கின்றனர்.

ஆனால், ப்ரெவுன் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனெனில் கண்டபின் விசுவாசிப்பவர் அடையும் பேறு, காணாமலே விசுவசிப்பவர் பெறும் பேற்றுக்குக் குறைந்ததல்ல (20:29) என்பது அவர் கருத்து. மேலும் யோவானின் விசுவாசம் காணாமல் விசுவசிக்கும் பேற்றிற்குக் கீழ் வரவில்லை என்கிறார். உயிர்த்த இயேசுவைக் காணாமலே விசுவசித்தது உண்மைதான். ஆனால் அவர் கல்லறைக் காலியாக இருந்ததைக் கண்டு நம்புகிறார். வசனம் 8ல் வரும் சொற்கள் கண்டதையும் நம்பியதையும்தான் குறிக்கின்றன. எனவே யோவான் காணாமலே விசுவசித்தவர்களுள் ஒருவரல்ல. மேலும் யோவானின் விசுவாசம் காணலோடு தொடர்புடையது.

ப்ரவுன் என்ற அறிஞரின் கருத்துப்படி அங்கு யோவானிடமிருந்து நாம் கற்றுக்கொள்வது.

"அன்பின் ஆற்றலாகும்" யோவான் நற்செய்தியின் ஆசிரியர் அன்புச்சீடரில் "அன்பின் முதன்மையை"க் காட்ட முற்படுகிறார். பேதுருவை விட விரைவாகக் கல்லறைக்கு வரும் யோவான் இயேசுவை அதிகம் அன்பு செய்கிறார். அன்பில் இயேசுவின் அருகாமையில் இருக்க விழைந்த யோவான் இயேசுவை துரிதமாகக் காண விழைந்தார். முதலில் அவர் மீது விசுவாசம் கொள்பவரானார்.

### முடிவுரை

உயிர்த்த இயேசுவை நம்ப தூய மனம், பிள்ளை உளம் வேண்டும். அன்பு கொண்ட மனதில் ஆண்டவன் குடியிருக்கிறார்.

யோவான் தனது திருமுகத்தில் (1யோ 4:7-12) "கடவுளை எவரும் என்றுமே கண்டதில்லை" (12)

ஆனால் அன்பு செலுத்தும் அனைவரும்... கடவுளை அறிந்துள்ளார்கள் (7) அன்பில்லாதோர் கடவுளை அறிந்துகொள்ள வில்லை (8) என்று அன்புக்கும் கடவுளை நம்பிக்கையால் அறிதலுக்கும் உள்ள தொடர்பு கிறிஸ்துவை நம்ப அவர்மீது அன்பு கூரவேண்டும் என்பதை நிலைநாட்டுகிறது.

இதே போல (மத் 11:25-27, லூக் 10:21-24) தந்தை தன்னை குழந்தைகளுக்கு வெளிப்படுத்துகிறார் என்பதும் அன்புள்ளம், தூய உள்ளம் உள்ளவருக்கு இயேசுவின் உயிர்ப்பின் மீது கொள்ளும் நம்பிக்கை அவ்வளவு கடினமாயிராது. ஏனெனில் விசுவாசமும் அன்பும் ஓரளவுக்கு ஒன்றே.

**- நன்றி விவிலிய விருந்து-**

## இலங்கை அப்போஸ்தலர் யோசப்வாஸ் முனிந்திரனின் விண்ணகப் பிறப்பின் முன்னூறாவது ஆண்டைச் சிறப்பித்து

### இலங்கை அப்போஸ்தலர் யோசப்வாஸ் அடிகள் (2ம் பகுதி)

கொங்கணி தாய்மொழியாய் இருந்தாலும் மிகக் கருத்தாய்
போர்த்துக்கேயருடன் லத்தீனும் கற்றுத்தேர்ந்தார்
கோவையில் யேசுசபைக் குருக்கள் நடாத்திய
பல்கலைக் கழகம் சேர்ந்து மொழிக் கலைத்திறனும் பெற்றார்

பல்கலை எல்லாம் கற்றுச் சிறப்புடன் தேர்ச்சி பெற்று
மெய்யியல் இறையியலை 'புனித அக்குவினாஸ்' தன்னில்
மேன்மையாய் நான்கு ஆண்டு விடுதி மாணவனாய்ச் சேர்ந்து
புனித செபமாலை அன்னை ஆலயத் தொண்டனானார்

சிற்றாலயத்தின் பரிசுத்த பீடத்தை
மிகவும் விரும்பி பீடப்படிகளில்
இளைஞன் ஜோசப் சாஷ்டாங்கமாய் வீழ்ந்து
இரவு முழுவதும் இறைவனை வணங்குவாராம்

அன்ரோனியோ பிராண்டோ ஆண்டகையால் குருவாக
திருநிலைப்படுத்தப்பட்ட ஜோசப்வாஸ் அடிகளாரின்
போதகப்பணியைக் கண்ட இராஜப் பிரதிநிதி - தன்
ஆன்ம வழிகாட்டியாய் அவரை நியமித்தார்

அப்பணியை மேற்கொண்ட வேளையில்தான் ஈழத்தில்
ஒல்லாந்தர் கொடுமைகளை அறிந்து துயருற்றார்
"இலங்கையே எனதிலக்கு" என்றதன் எண்ணத்தை
எப்படியும் நிறைவேற்றத் தருணத்தைப் பார்த்திருந்தார்

கப்பலில் ஏற்பட்ட பழுதைத் திருத்துதற்கு
கொழும்பில் தங்கி நின்ற கோவை நகர்க் குரு ஒருவர்
கத்தோலிக்க மக்கள் ஒல்லாந்தரால் படும்
துன்பங்கள் கொடுமைகளை 'ஜோசப்'பிடம் விரித்தார்

(நவாலியூர் நாயகி)

(தொடரும்...)

# மல்வம் பங்கில் மறைக்கல்வி விழா



மறைக்கல்வி வாரத்தை ஒட்டி பங்குத்தந்தை அருட்பணி. சாள்ஸ் யஸ்ரின் அடிகளாரின் வழிகாட்டலுடன் மறையாசிரியர்களால் பல்வேறு நிகழ்வுகள் நடாத்தப்பட்டன. சிரமதானம், மாணவர்களுக்கும் மறையாசிரியர்களுக்கும், தோழமை உணவு மற்றும் விளையாட்டுப் போட்டிகள், நடத்தப்பட்டன.

இறுதி நாளில் ஆலயத்தில் வலயக்கொடிகள ஏற்றப்பட்டு பங்குத்தந்தையால் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. அன்றைய தினம் கிளறேசியன் சபையைச் சார்ந்தவரும் மண்ணின் மூன்றாவது அருட்சகோதரியுமாகிய மேரி றெசில்டா அவர்கள் வரவேற்கப்பட்டு கௌரவிக்கப்பட்டமை சிறப்பு அம்சமாக விளங்கியது.

பங்குத்தந்தை தமது மறையுரையில் இறையழைத்தல் எனும் விதையானது சிறு உள்ளங்களில் விதைக்கப்பட்டு அழைத்தல்கள் பெருகிட அனைவரும் அர்ப்பணிப்புடன் செயலாற்றிட வேண்டும் என்றும் அழைக்கப்பட்டவர்களின் பணி வாழ்வு பற்றியும் எடுத்தியம்பினார்.

இறுதி நிகழ்வாக வெற்றியீட்டிய மாணவர்களுக்கும் மறையாசிரியர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டது. பின்னர் தலைமை மறையாசிரியர் செல்வி. அ. றெஜினியலாவின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் [illegible]

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருக்கள் ஆண்டு ஜூன் 2009 - ஜூன் 2010



# இறைமக்கள் குருத்துவம்

குருத்துவம் என்ற வார்த்தையைக் கேட்டவுடன் பொதுவாக நம் பங்குத்குருக்களைத் தான் நாம் நினைக்கின்றோம். மறைய ஏற்பாட்டில் காணப்படும் குருக்களும் பிற சமயங்களில் காணப்படும் குருக்களும் நமக்கு வெளிப்படுத்தும் பார்வை என்னவென்றால், இவர்கள் யாவருமே பலி செலுத்துபவர்கள் மட்டுமே. "குருக்கள் தமக்குரிய திருப்பணியைச் செய்தனர்" என்று குறிப்பேடு நூலில் காண்கின்றோம். (2 குறி 7:6) அதேபோன்று செகரியா என்ற குரு கோவிலில் திருப்பணியைச் செய்தார்; அதாவது செகரியா கடவுளின் திருமுன் குருத்துவப்பணி (தூபம் காட்டுவது) ஆற்றி வந்தார் என்று லூக்கா நற்செய்தியாளரும் குறிப்பிடுகின்றனர் (1:8). எனவே, பொதுவாக குரு என்ற வார்த்தையை விவிலியத்தில் காணும் போது பலி செலுத்துபவரைத்தான் நினைத்துப் பார்க்க முடிகிறது. இப்படிப்பட்ட நிலையில் குருத்துவ அருள் அடையாளம் பெற்ற குருக்களின் வாழ்வும் பணியும் கடவுளுக்குரியதாக நிலைபெற வேண்டும் என்பதற்காகத்தான் குருக்கள் ஆண்டு என்று இத்தருணத்தில் நாம் கொண்டாடுகின்றோம். இச்சூழலில் இறைமக்களுக்கும் குருக்களுக்கும் தொடர்பு உண்டா? கத்தோலிக்கக் குருக்கள் வெறும் பலி செலுத்தும் பணியாளர்கள் மட்டும்தானா? போன்ற கேள்விகள் எழுகின்றன. இதற்கானத் தேடலை இவண்காண்போம்.

## குருக்களும் இறைமக்களும்

குருக்கள் தங்கள் குருத்துவ அருள் அடையாளத்தின் காரணத்தால் அருள் அடையாளப்பணி ஆற்ற கடமைப்பட்டிருக்கிறார்கள். எனவே அவர்கள் குருக்கள் என்று சிறப்பாக அழைக்கப்படுகிறார்கள். இந்த குருக்களைப் பெறுவதிலும் அவர்களுக்காக செபிப்பதிலும் இறைமக்கள் ஊக்கிவிக்கப்படுகிறார்கள். அதனால் தான் இந்த குருக்கள் ஆண்டு தருணத்தில் குருக்களுக்காக செபிப்போம் என்று அழைக்கப்படுகிறார்கள். இந்த குருக்கள் ஆண்டில் குருக்களுக்காக செபிப்பது மட்டும்தான் இறை மக்களின் கடமை என்று கருதக்கூடாது. தங்களுக்கும் குருத்துவப் பணி உண்டு என்பதையும் இந்தக்கருணத்தில் சிந்திக்க வேண்டும். குருக்களும் தாங்கள் ஏதோ மிக மேலான இடத்தில் இருப்பதாகவும் இறைமக்கள் எல்லாம் தங்களுக்குக் கீழ் இருப்பவர்களாகவும் கருதி வேறுபடுத்திப் பார்க்கின்ற மனநிலையைத் தவிர்க்க வேண்டும். குருக்களும் இறை மக்களும் இணைந்ததுதான் திருச்சபை. இந்த திருச்சபையின் வாழ்வும் பணியும் இறைவனுக்கு மாட்சிமையையும் புகழ்ச்சியையும் அளிக்க வேண்டும். இத்தகையத் தெளிவை குருக்களும் இறை மக்களும் அடைய வேண்டுமென்றால் ஒவ்வொருவருக்குரிய அழைத்தலின் தன்மை என்ன என்பதை நாம் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

## குருத்துவ அரசர்கள்

யூதச் சமுதாயத்தில் இறைவாக்கு உரைப்பவரை நம்பட்டத்தை தெளிவுபடுத்து பலரையும் குருக்களாக் கருதும் வழக்கம் இருந்தது (காண்க நீதி 17:5;18:5-1 சாமு 14:36-42). ஆனால் யூத முறைமைப்படி பலி செலுத்துபவர்தான் குரு என்று பொதுவாகக் கருதப்பட்டார். இந்த வழக்கம் இந்து சமயம், சமண மதம், புத்த மதம் போன்ற சமயங்களிலும் இருக்கிறது. இருப்பினும் விவிலிய வெளிப்பாடு நமக்கு குருத்துவத்தின் மற்றுமொரு பரிமாணத்தைத் தெரிவிக்கின்றது. அதுதான் இறைமக்கள் குருத்துவம்

இஸ்ரயேல் மக்கள் எகிப்திலிருந்து விடுதலை அடைந்து செங்கடலைக் கடந்தார்கள். அதன் பின்னர் சீனாய் பாலைநிலம் வழியாகப் பயணம் செய்து சீனாய் மலை அருகில் பாளையம் இறங்கினார். மக்களை அங்கேயே விட்டுவிட்டு மோசே கடவுளின் மலையான ஒரேபுக்கு ஏறிச்சென்றார். அங்கே கடவுள் இஸ்ராயேல் மக்களுக்கு அறிவிக்க வேண்டிய செய்தியை மோசேயிடம் தெரிவித்தார். அது பின்வருமாறு: "நீங்கள் என் வார்த்தைக்குச் செவி சாய்த்து என் உடன்படிக்கையைக் கடைப்பிடித்தால் அனைத்துலகும் என் உடைமையேயெனினும், நீங்களே எல்லா மக்கள் இனங்களிலும் என் தனிச் சொத்தாவீர்கள். மேலும் எனக்கு நீங்கள் குருத்துவ அரசாகவும், தூய மக்களினமாகவும் இருப்பீர்கள். இவ்வார்த்தைகளை நீ இஸ்ராயேல் மக்களிடம் கூறவேண்டியவை" என்றார் (வி.ப. 19:5)

## தூய குருக்கள்

கிறிஸ்தவ அழைப்பும் பொறுப்பும் பற்றி புனித பேதுரு தனது முதல் மடலில் எழுதுகிறார். இதில் "இயேசு கிறிஸ்துவின் வழியாகக் கடவுளுக்கு உகந்த ஆவிக்குரிய பலிகளைப் படைக்கும் தூய குருக்களின் கூட்டமாக இருப்பீர்கள்" என்று இறைமக்களைக் குறித்து எழுதுகிறார். (1 பேதுரு 2:5). இக்கருத்தை மேலும் வலியுறுத்தும் வண்ணம் விடுதலைப் பயண நூலில் காணும் கடவுளின் வெளிப்பாட்டை பின்னணியாகக் கொண்டு "நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழி மரபினர், அரச குருக்களின் கூட்டத்தினர், தூய மக்களினத்தினர்; அவரது உரிமைச் சொத்தான மக்கள்" என்று பேதுரு குறிப்பிடுகிறார் (1பேது 2:9). அதாவது பிற மக்களிடையே கிறிஸ்தவ மக்கள் யாவரும் தங்கள் நன்னடத்தையினால் கடவுளுக்கு உகந்தவர்களாக வாழ வேண்டும் என்றும் அந்த கடவுள் என்ற அரசருக்கு உகந்த வழிபாடு செலுத்தும் குருக்களாக இருக்க வேண்டும் என்றும் பேதுரு மீண்டும் வலியுறுத்துகிறார். காய், கனிகளையும், ஆடு, மாடுகளையும் பலியாக ஒப்புக்கொடுப்பதை விடுத்து தங்களது வாழ்க்கையையே கடவுளுக்கு உகந்த பலியாக, அதாவது ஆன்மீகப் பலியாக ஒப்புக்கொடுப்பதை பேதுரு இங்கே வலியுறுத்துகிறார். இதையே புனித பவுலும் பல கடிதங்களில் வலியுறுத்துவதை நாம் காண்கிறோம். (காண் உரோ 12:1-2, 1 கொரி 6:19-20, எபே 2:10, தீத்து 2:11-14).

## முடிவாக

திருமுழுக்குப் பெற்று கடவுளின் பிள்ளைகளாகவும் கிறிஸ்துவின் சீடராகவும் மாறுகின்ற ஒவ்வொருவரும் குருக்களே. இவர்கள் கடவுள் என்ற அரசருக்கு வழிபாடு செலுத்தும் குருக்கள். அருட்சாதனங்களை நிறைவேற்றும் பணி குருத்துவத்தை ஏற்றவர்கள் மட்டும்தான் குருக்கள் என்ற எண்ணத்தை விடுத்து, இறைமக்கள் யாவருமே கடவுளுக்கு உகந்த வாழ்க்கையை பலியாகச் செலுத்தும் குருக்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இத்தகைய வாழ்க்கையில் தங்களை மட்டும் மையமாக கருதாமல் தங்களோடு இருப்பவர்களையும் கடவுளின் மக்களாக மாற்றும் கடமையும் இவர்களுக்கு உண்டு. ஆகவேதான் நற்செய்தி அறிவிக்கும் பணியும் இத்தகைய குருத்துவத்தில் அடங்கியுள்ளது. எனவே குருக்கள் ஆண்டை கொண்டாடும் இறைமக்களுக்கும் தங்கள் குருத்துவ கடமையை ஆற்ற வேண்டும் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

---

## தரணியில் தடம் பதித்த குருக்கள்

கருவறையில் உறைந்து
காலம் செய்த தவப்பயனால்
தரணியில் தடம் பதித்தீர்கள்
இறைபணி நான் செய்வேன் – என
இறங்கினீர்கள் திருச்சபைக்குள்

இன்பங்கள் அனைத்தும் துறந்து
இணைந்தீர்கள் குருத்துவக் குடும்பத்தில்
குறைகள் தொடர்ந்து வந்தாலும்
தொடர்வோம் எங்கள் பணி என்றீர்கள்

கோடி துன்பங்கள் வந்தாலும்
என்ன துயரம் நேர்ந்தாலும்
செய்வேன் அனைத்தும் நற்செய்திக்காக – என
இறைவனுக்குள் இடம் பிடித்தீர்கள்

தொலை தூரம் நடந்தாலும் – நம்
கால்கள் சோராது என்றீர்கள்
நற்செய்தி தனை பறைசாற்றினாலும்
நம் நாவு வறளாது என்றீர்கள்

சவால்கள் பல எழுந்தாலும்
தொடர்ந்து செல்வோம் நாம்
துணிந்து போதிப்போம் நற்செய்தி – என
நடை போடுகிறீர்கள் நீங்கள்

வாழ்க! உங்கள்பணி என்றும்
வளர்க நின்சேவை தரணியில்
உங்கள் குருத்துவம் வளமாக
வேண்டுவோம் நாம் நற்செபத்தில்

வி. லிஸ்ரா சாந்தினி
சாவகச்சேரிப்பங்கு

---

## அருட்பணியாளரே உங்களோடொருகணம்...

வாழ்வோடு எம் வாழ்வின் வழியோடு
நடை போடும் அருட் பணியாளரே
எடைபோட உண்டோ யாருக்கும் பலம்
விடையோடு வருகின்றேன் விழிப்பாக கேளுங்கள்

பிறந்தவுடன் ஒருபாவம் சென்ம பாவம்
யாருக்குண்டு? பலம் அப்பாவம் போக்கிட
அருட்பணியாளரே உம்மால் தான் முடியும்
திருமுழுக்கெனும் அருட் சாதனம் கொடுப்பதனால்

திருப்பலி தனிலே தினந்தோறும் ஜெபித்து
அப்பத்தை கிறிஸ்தவன் உடலாக இரத்தமாக
நாள்தோறும் மாற்றி கிறிஸ்துவைக் கொடுக்க
அருட் பணியாளரே உம்மால்தான் முடியும்

வாழ்விலே சிறந்த வாழ்வு குடும்பவாழ்வு
குடும்பத்தில் ஒன்றிணைய மெய் விவாகம்
வையத்தில் நடாத்தி வாழ்வை சிறப்பிக்கும்
அருட் பணியாளரே உம்தாழ் பணிகின்றோம்

நோய் நொடியிலும் பல்வேறு கஷ்டத்திலும்
ஆசீர் வதிக்கும் அருட்கரம் கொண்டவரே
அருட் பணியாளரே யாருமுண்டோ உமைப்போல
இவ் உலகில் ஏனைய் உரைக்க

நோய்வசித்து சாவின் பிடியினில் நாமிருக்க
எம்மருகில்வந்து நோயிற் பூசுதல் தந்து
எம்பாவம் போக்கும் அருட் பணியாளரே
உரமாகச் சொல்வோம்நாம் வாழும்கிறிஸ்து நீர்தானென்று

பிறந்து நாம்வாழ்ந்து இறந்து வான்வீட்டிற்கு
பறந்து செல்லும்வரை பரிசுத்தமாய் இருக்க
எம்கரம் பிடித்து வழிநடத்தும் அருட்பணியாளரே
வணங்கி தாழ்பணிந்து அர்ப்பணிக்கிறேன் கவிதையால்

திருமதி- விக்டர் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

## இறை இரக்கம்...
(5ம் பக்கத் தொடர்ச்சி)

என்பெரும் பேறாக கொண்டு நானே காத்து வருவேன்" என்றுரைத்தார். (நாட் குறிப்பு.47,48)

இதனை அடுத்துவந்த காட்சியில் இயேசு கூறியதாவது "என் உருவம் உன் உள்ளத்தில் ஏற்கனவே உள்ளது. இறை இரக்கத்திற்கான 'திருநாள் ஒன்று வேண்டுமென்பது என்விருப்பம். இவ்வுருவத்தை நீ தூரிகையால் வரைந்து அதனை உயிர்ப்புத் திருநாளுக்குப் பின் வரும் முதல் ஞாயிறன்று முறைப்படி அர்ப்பணித்து, அந்த நாளை இறை இரக்கத்தின் திருநாளாகக் கொண்டாட வேண்டுமென்பதே என் விருப்பம்" (நாட்குறிப்பு. 49)

இந்த வரலாற்று அடிப்படையில் எழுந்ததே இன்று நாம் கொண்டாடும் இறை இரக்கப் பெருவிழாவாகும். இவ்விழா மனிதரால் கொண்டாடப்படவில்லை மாறாக இயேசு ஆண்டவரினால் அறிவிக்கப்பட்ட, ஏற்படுத்தப்பட்ட விழாவாகும்.

இறை இரக்கத்தின் பக்தியையும், வளத்தையும் அனுபவபூர்வமாக சுவைத்து, இறை அன்பின் பெருக்கத்தில் திளைத்து, கரைபுரண்டோடும் தேனாகப் பொழியப் பெறும் பரமானந்த அருளில் மூழ்கி பாவக்கறைகளைப் போக்கிக் கொள்ளும் ஒரு அதி உன்னத திருநாளை நம் ஆண்டவரே தேர்ந்து அதனை உலகிற்கு அறிவித்துள்ளார்.

உயிர்ப்புத் திருநாளுக்குப் பின் வரும் முதல் ஞாயிறு புனிதம் பெற உயிர்த்தெழுந்த ஆண்டவரே காரணமாகின்றார். அன்று அவர் தம் சீடர்களுக்குத் தோன்றிய இறைமகன் இயேசு, வாரத்தின் முதல் நாள் மாலை வேளையில் சீடர்களுக்குத் தோன்றியதையும், அவ்வேளை அங்கில்லாத தோமாவிடம், அதன் எட்டாம் நாள், "உன் கையை நீட்டி என் விலாவில் இடு. ஐயம் தவிர்த்து நம்பிக்கை கொள்" (யோவான்20:26) என்று கூறியதும், இத்திருநாளானது தெய்வீக இரக்கத்தின் திருநாள் என்பதும், விலாவிலிருந்து திறக்கப்பட்டு, ஊற்றுப் பெருக்காக பொங்கிவரும் பேரிரக்கமே மக்களைப் பாவத்திலிருந்து தூய்மைப்படுத்தும் என்பதும் தெளிவாகின்றது.

எனவே உலகெங்கும் இன்று கொண்டாடப்படும் இத்திருநாளிலே, சிறப்பாக நம் நாட்டிலும் மூன்று மொழிகளிலும் வெவ்வேறு இடங்களில் கொண்டாடப்பட்டாலும், நாமும் இறை இரக்கப் பக்தியை, திருநாளை அனுசரித்து இறை இரக்கத்தைப் பெறுவோம்.

# புனித வாரம்

கெ. இரோனியஸ்
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி

தவக்காலத்தின் ஆறாவது வாரம் புனித வாரமாக அனுசரிக்கப்படுகிறது. இது பரிசுத்த வாரம் என்றும் அழைக்கப்படுகிறது.

இறைமக்கள் இவ்வாரத்தில் ஏனைய வார நாட்களை விட மிகவும் அக்கறையாக இருந்து தங்களுடைய ஆன்மீக காரியங்களையும், ஒறுத்தல் முயற்சிகளையும் செய்வார்கள். சிறப்பாக, கடந்த வாரங்களில் ஒறுத்தல் முயற்சி செய்தவர்களும், செய்யாதவர்களும் கூட இவ்வாரத்தில் தங்களை ஒறுத்து பாஸ்கா விழாவிற்கு ஆயத்தம் செய்வதை அவதானிக்கலாம். கிறிஸ்தவர்கள் தங்களுடைய அவசர மற்றும், அவசியமற்ற செயற்பாடுகளை சற்று ஒதுக்கிவிட்டு புனித வார வழிபாடுகளில் பக்தியோடு கலந்து கொள்வார்கள்.

இவ்வாரத்தில் இறைமக்கள் வாழுகின்ற சூழலில் ஒருவித அமைதியையும், பக்தி உணர்வையும் புத்துணர்வையும், அதேவேளையில் சோக உணர்வையும் கூட அவதானிக்க முடியும். ஆலயங்களிலும், இல்லங்களிலும் இசைக்கப்படுகின்ற 'பரிமுழ' கீதத்தை இக்காலத்தில் இறைமக்கள் கொண்டுள்ள உணர்வுபூர்வ ஈடுபாட்டின் வெளி அடையாளமாகக் காணலாம்.

புனித வாரம் ஆண்டவருடைய திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு அன்று ஆரம்பமாகிறது. கிறிஸ்து பெருமான் தமது பாஸ்கா மறை பொருளை நிறைவேற்ற எருசலேமிற்கு வருகை தந்ததை திருச்சபை இன்று நினைவு கூருகின்றது. வருடம் தோறும் பாஸ்கா விழாவைக் கொண்டாட இயேசு எருசலேமிற்கு வருவதுண்டு. ஆனால் இம்முறை தன்னையே பாஸ்காப் பலியாக நிறைவேற்றிட வருகிறார்.

இயேசுவும் அவருடைய சீடர்களும் எருசலேம் நகருக்கள் நுழைந்த போது, மக்கள் மகிழ்ச்சியில் ஆரவாரம் பொங்க, ஒலிவக்கிளைகளை உயர்த்திப் பிடித்து ''தாவீதின் மகனுக்கு ஓசான்னா! ஆண்டவர் பெயரால் வருபவர் வாழி' என்று அரச மரியாதையுடன் வரவேற்றதைப் போன்று, கிறிஸ்துவின் பதிலாளாய் விளங்கும் குருவானவரை இறைமக்கள் குருத்தோலைகளை தமது கையில் ஏந்தி மகிழ்ச்சியோடு வரவேற்று, கிறிஸ்துவின் எருசலேம் வருகையை நினைவு கூருகின்றனர்.

இன்றைய வழிபாடு, 1. குருத்தோலைப் பவனி, 2. திருப்பலி என இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. குருத்தோலை புனிதப்படுத்தும் சடங்கு நடைபெறும் வேளையில், இயேசு எருசலேம் நகருக்குள் நுழைந்ததை தொடர்பான இறைவார்த்தைப் பகுதியை நற்செய்தியிலிருந்து குருவானவர் வாசிப்பார். பின்னர், மறையுரை ஆற்றுவார். திருப்பலியில் நற்செய்தி வாசகம் இயேசுவின் பாடுகளைச் சித்தரிக்கும் வரலாற்றுப் பகுதியிலிருந்து உரையாடல் முறையில் வாசிக்கப்படும்.

இந்த புனித வாரத்தில் வியாழன், வெள்ளி, சனி ஆகிய புனித நாட்கள் மிகவும் முக்கியமான நாட்களாகும். பாஸ்கா வியாழன் உச்சக்கட்ட வழிபாடு புனித வியாழனோடு ஆரம்பமாகி புனித சனி இரவோடு முடிவடைகின்றது. இந்த நாட்களில் நடைபெறும் வழிபாடுகள் மூன்று வேறுபட்ட வழிபாடுகள் அல்ல, மாறாக, அவை யாவும் ஒரேயொரு வழிபாடாகவே அமையும்.

## புனித வியாழன்

இந்த நாளில் ஆண்டவரின் இராவுணவு நிகழ்வை நினைவு கூருகின்றோம். திருச்சபையின் மிகப் பழமையான வழக்கப்படி, இறைமக்கள் பங்கு பெறாத திருப்பலிகள் எல்லாம் இன்று தடைசெய்யப்படும். மாலை வேளையில், கடைசி இராவுணவுத் திருப்பலி இறைமக்கள் அனைவரும் முழுப் பங்கேற்க கொண்டாடப்படும். இந்த நாளில் கிறிஸ்து அன்பின் அடையாளமாகவும், தமது உடனிருப்பை உணர்த்தும் அருட்சாதனமாகவும், உறவின் சின்னமாகவும், பகிர்வின் அடையாளமாகவும், சமத்துவத்தின் சின்னமாகவும் நற்கருணையை ஏற்படுத்தினார். சீடர்களின் பாதங்களைக் கழுவி அன்புக் கட்டளையை வழங்கினார். தமது பணி வாழ்வின் புனித கருவியாக பணிக் குருத்துவத்தையும் ஏற்படுத்தினார்.

இன்றைய நாளின் வழிபாடுகள் நான்கு பகுதிகளாக வகுக்கப்பட்டு நிகழ்த்தப்படுகிறது. அவை,

1. இறைவாக்கு வழிபாடு
2. பாதம் கழுவுதல்
3. நற்கருணை வழிபாடு
4. நற்கருணை இடமாற்றுப் பவனி

என்பனவாகும்.

நற்கருணை இடமாற்றுப் பவனியானது நம் மீட்பரான இயேசு தம் திருத்தூதர்களுடன் ஜெத்சமெனி எனும் தோட்டத்திற்கு புறப்படுவதை நினைவுகூரும் வகையில் இடம் பெறுகின்றது. ''ஒரு மணி நேரம் கூட என்னோடு விழித்திருக்க உங்களுக்கு வலுவில்லையா?' என்று கேட்ட இயேசுவை, இறைமக்கள் தனியாகவும், குடும்பமாகவும், குழுவாகவும் ஒன்று கூடி தரிசித்து, ஆராதனை செய்வார்கள்.

குறிப்பு :- இந்த நாளில் திருத்தைலம் மந்திரிக்கும் திருப்பலி காலையில் இடம் பெறும். திருப்பலியில ஆயர் நோயாளிகளின் எண்ணெயையும் திருமுழுக்கு ஆயத்தக்காரரின் எண்ணெயையும் மந்திரித்து, கிறிஸ்மாத் தைலத்தை அர்ச்சிப்பார். ஆயரும் குருக்களும் கூட்டுத் திருப்பலியாக இத் திருப்பலியை நிறைவேற்றுவர். இது குருக்கள் ஆயரோடு கொண்டுள்ள ஒன்றிப்பை வெளிப்படுத்திக் காட்டுகின்றது. இன்று குருக்கள் தமது குருத்துவ வாக்குறுதிகளை அனைவர் முன்பாகவும் புதுப்பித்துக் கொள்வார்கள்.

இந்த திருத்தைலம் மந்திரிக்கும் திருப்பலி எமது மறைமாவட்டத்தில் குருக்களின் வசதி கருதி புனித திங்கள் மாலையில் இடம் பெறுகின்றது.




## புனித வெள்ளி

இந்நாள் ஆண்டவருடைய திருப்பாடுகளை நினைவுகூரும் நாளாகும். ''ஓசான்னா'' என்று இயேசுவை வாழ்த்திய அதே மக்கள் ''ஒழிக'' என்று கோஷமிட்டு அநீதியாக தீர்ப்பிட்ட நாள். ஆனால் பாவங்களையும், சாபங்களையும், அனைத்து அநீதிகளையும் இயேசு தமது மரணத்தால் வெற்றி கொண்ட நாளும் இதுவே இறைசித்தத்தை நிறைவேற்ற சிலுவை மரணத்தை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்ட நாளும் இதுவே. இன்றைய நாளில் சிலுவைப் பாதைத் தியான வழிபாடு காலையில் அல்லது வசதியான நேரம் இடம் பெறும். இன்றைய நாளில் ஒரு சந்தியும், மாமிசத் தவிர்ப்பும் அனுசரிக்கும்படி திருச்சபை இறைமக்களை அழைத்து நிற்கின்றது.

இன்றைய நாளின் வழிபாடு பின்வரும் மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது.

1. இறைவாக்கு வழிபாடு
2. திருச்சிலுவை ஆராதனை
3. திருவிருந்து

ஆண்டவர் இயேசு தம்மையே வெறுமையாக்கியதன் அடையாளமாக பலிபீடம் வெறுமையாக காட்சியளிக்கும். குரு பீடத்தின் முன் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து செபிப்பார். இறைமக்களும் முழந்தாளிட்டு தமது பாவங்களுக்காக மனம் வருந்தி மன்னிப்புக் கேட்பர்.

## புனித சனி

இன்றைய நாள் பாஸ்காத் திருவிழிப்பு என்று அழைக்கப்படுகிறது. தொன்று தொட்டே இவ்விரவு ஆண்டவருடைய வருகைக்காக விழித்திருந்து காத்திருக்கும் இரவாக இருந்து வந்துள்ளது (யாத். 12:42). நற்செய்தியில் காண்பது போல், ஆண்டவரின் வருகையை எதிர் கொள்ள எரியும் விளக்குகளுடன் ஆயத்தமாக இருந்தவர்கள் போன்று, இன்றைய இரவில் இறைமக்கள் காத்திருப்பர்.

இங்கு ஒளி இறைவனைக் குறிக்கும் அடையாளக் குறியாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஏனெனில், ஒளியின் வடிவில் தான் இறைவன் முட்புதரில் மோசேக்கு காட்சி தந்தார். ஒளியின் வடிவில் தான் இயேசுவின் பிறப்பு அறிவிக்கப்பட்டது. இன்று புதுத் தீ புனிதப்படுத்தி பாஸ்காத் திரியில் ஏற்றப்படும். இங்கு ஒளியின் அடையாளம் இயேசுவின் உயிர்ப்பை உறுதிப்படுத்துகிறது. ஏனென்றால், ''உலகின் ஒளி நானே'' என்று இயேசு மொழிந்தார். பாஸ்காத் திரியில் காணப்படும் சிலுவை அடையாளம் மானிடம் முழுவதும் சிலுவையால் மீட்கப்பட்டதையும், அல்பா, ஒமேக்கா என்ற கிரேக்க எழுத்துக்கள் இயேசு என்றென்றும் நிலையானவர் என்பதையும், எழுதப்பட்டிருக்கும் ஆண்டு, இயேசு காலங்களையும் யுகங்களையும் கடந்தவர், மாட்சியும் ஆட்சியும் அவருக்கே உரியன என்பதையும் குறிக்கின்றன. ஐந்து சாம்பிராணி மணிகளும், இயேசுவின் ஐந்து திருக்காயங்களை ஞாபகப்படுத்துகின்றன. இன்றைய வழிபாடுகள் நான்கு பகுதிகளைக் கொண்டுள்ளன. அவை,

1. திரு ஒளி வழிபாடு
2. இறைவார்த்தை வழிபாடு
3. திருமுழுக்கு வழிபாடு
4. நற்கருணை வழிபாடு என்பனவாகும்.

பாஸ்கா இரவு விடுதலையின் இரவு. மனித குலம் மீட்புப் பெற்ற இரவு. மீட்புப் பெற்ற இஸ்ராயேல் மக்கள் தங்களுக்கு இறைவன் செய்த வல்ல செயல்களுக்காய் இறைவனுக்கு நன்றிப் பண் இசைத்தனர். அதே விதமாக நன்றியை வெளிப்படுத்தும் முகமாக குருவானவர் பாஸ்காப் புகழுரையைப் பாடுவார்.

இன்றைய இறைவார்த்தை வழிபாடு மீட்பின் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது. பழைய ஏற்பாட்டிலிருந்து ஏழு திருமுகம், நற்செய்திப் பகுதிகளிலிருந்து ஒவ்வொன்றுமாக ஒன்பது வாசகங்கள் வாசிக்கப்படும். இவ்வேளையில் கிறிஸ்துவின் உயிர்ப்பை வெளிப்படுத்தும் முகமாக குருவானவரால் ''உன்னதங்களிலே'' பாடப்படும் (ஆலய மணிகளும் ஒலிக்கும்)

தொடர்ந்து தண்ணீர் புனிதப்படுத்தப்பட்டு திருமுழுக்கு அளித்தல், திருமுழுக்கு வாக்குறுதிகளை புதுப்பித்தல், இறைமக்களை புனித நீரால் புனிதப்படுத்தல் போன்ற நிகழ்வுகள் இடம் பெறும். மேலும், நற்கருணை வழிபாட்டின் மூலம் அன்னையாம் திருச்சபை கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகிய பாஸ்கா மறை பொருளை பக்திச் சிறப்புடன் கொண்டாட அழைத்து நிற்கின்றது. இத்தோடு புனித வியாழனோடு ஆரம்பித்த வழிபாடுகள் நிறைவு பெறுகின்றன. இக்கருத்துக்கள் அனைத்தையும் நன்கு உணர்ந்தவர்களாக புனித வார வழிபாடுகளில் பக்தியோடு பங்கு பற்றுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்ப்பு இறையியல்

**உட்புகுமுன் :**

வரலாற்று மனிதர்களில் நாசரேத்து இயேசுவுக்கு மட்டும் உயிர்ப்பு என்ற சொல்லாட்சி பொருந்துவதாக உள்ளது. இயேசு கிறிஸ்து உயிரோடு வாழ்ந்தபோது ஆற்றிய மகத்தான செயல்கள் பல. இயேசுவை "கிறிஸ்துவாக" உலகிற்கு அறிமுகப்படுத்தியது அவரது உயிர்ப்பு நிகழ்வு. இத்தகைய இயேசுவின் உயிர்ப்பு, அடிப்படையான ஒரு வரலாற்று நிகழ்வாகவும், ஒரு நம்பிக்கை மறைபொருளாகவும் அமைந்துள்ளது. இயேசுவின் உயிர்ப்பைக் கீழ்கண்டவாறு சுருக்கமாக கோடிட்டுக்காட்டலாம்.

1. கிறிஸ்துவின் உயிர்ப்பு, அவரின் பாடுகள், இறப்பு, உயிர்ப்பு என்ற ஒரே பாஸ்கா மறைநிகழ்வின் மறுபகுதி. சரியாகச் சொல்லவேண்டுமென்றால் இயேசுவின் இறப்பின் மறுபகுதியே அவரது உயிர்ப்பு.

2. இயேசுவின் செய்தியாகிய இறையாட்சியோடு பிரிக்கமுடியாத அளவிற்கு நெருக்கமாகப் பின்னிப்பிணைந்திருப்பது இயேசுவின் உயிர்ப்பாகும்.

3. நற்செய்திகளின் அடிப்படையில் உயிர்ப்பு இறைவனின் வெற்றியாகக் கணிக்கப்படுகிறது. பேதுரு தனது முதல் பேருரையில் 'இறைவன் அவரை உயர்த்தினார்' என்று மார்தட்டிக் கூறினார். (திப 2:32). இவ்வாறு இது இறைவனின் வெற்றியாகக் காணப்பட்டது.

4. இறுதியாக, உயிர்ப்பு சாவின்மேல் வாழ்வு கொள்ளும் வெற்றி பொய்மையின் மேல் உண்மை கொள்ளும் வெற்றி அதர்மத்தின் மேல் தர்மம் கொள்ளும் வெற்றி.

### இயேசுவின் உயிர்ப்புக்கான விவிலிய அடிப்படை

தொடக்கத் திருச்சபையை உருவாக்கிய நிகழ்வே உயிர்ப்பு என்று சொல்லும் அளவிற்கு இயேசுவின் சீடர்கள் சான்று பகர்ந்துள்ளார்கள். "கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லையென்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டுள்ள நம்பிக்கையும் பொருளற்றதாகி இருக்கும். நாங்களும் கடவுளின் சார்பில் பொய்சான்று பகர்வோர் ஆவோம்" (2கொரி 15:14-15). இயேசுவின் உயிர்ப்புப் பற்றிய சாட்சியங்கள் திருத்தூது மடல்களிலும் நற்செய்திகளிலும் நிறையவே காணப்படுகின்றன. நற்செய்திகள் தருகின்ற உயிர்ப்புப் பற்றிய செய்திகளுக்கு முந்தையவை திருத்தூது மடல்களில் காணப்படுகின்ற உயிர்ப்பு பற்றிய சாட்சியங்கள். பொதுவான கண்ணோக்கில் நற்செய்திகள் தருகின்ற உயிர்ப்புப் பற்றிய செய்திகளுக்கும், திருமடல்களில் காணப்படுகின்ற உயிர்ப்புப் பற்றிய சாட்சியங்களுக்கும் பெரிய வேறுபாடு காணப்படுவதில்லை. மேலோட்டமாகப் பார்க்கும் போது நற்செய்திகள் தரும் உயிர்ப்பு பற்றிய செய்திகளை, மடல்கள் உறுதி செய்வதுபோலவே திருமடல்கள் தரும் உயிர்ப்பு பற்றியசாட்சியங்கள் நற்செய்திகள் தரும் உயிர்ப்பு பற்றிய செய்திகளுக்கு முந்தியவை. எனவே உயிர்ப்புப் பற்றிய நம்பிக்கைச் சாட்சியங்களுக்கு முதன்மைத்துவம் வழங்க வேண்டும் என்று சில அறிஞர்கள் கருதுகின்றனர். உயிர்ப்பு நம்பிக்கையின் இரத்தினச்சுருக்கம் என்று அழைக்கப்படுகின்றது.

1கொரி 15:3-5 பகுதி மிக முக்கிய உயிர்ப்புச் சாட்சியாகக் கணிக்கப்படுகிறது. கி.பி.30 ஆவது ஆண்டிலேயே அந்தியோக்குத் திருச்சபை கையாண்டுள்ளார் என்று கருதப்படுகிறது. புனித பவுலுக்கு முந்திய உயிர்ப்புப் பற்றிய சொற்றொடர்களும் சொல்லாட்சிகளும் பவுலின் மடலில் பல்வேறு இடங்களில் காணப்படுகின்றன. (ஒப். உரோ 13, பிலி. 26:11, உரோ 10:5-8, 10:9, எபி 4:7-12). எனவே இயேசுவின் உயிர்ப்புப் பற்றிய நமது நம்பிக்கைக்கு அடிப்படையாக இருக்க வேண்டுவது பவுலின் திருமடலில் காணப்படுகின்ற உயிர்ப்பு பற்றிய நம்பிக்கை அறிக்கை (1கொரி. 15:3-5) என்று ஆராய்ச்சியின் அடிப்படையில் வலியுறுத்திக் கூறப்படுகிறது.

இருப்பினும் கத்தோலிக்க மரபில், பவுலின் திருமடலில் காணப்படுகின்ற நம்பிக்கை அறிக்கையை விடவும் நற்செய்திகளில் காணப்படுகின்ற உயிர்ப்பு பற்றிய செய்திகளே மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தி வந்துள்ளன என்று கூறலாம். நற்செய்திகள் வழங்குகின்ற உயிர்ப்புப் பற்றிய செய்திகளை மூன்றுவகைப்படுத்தலாம்.

அ. திறந்த கல்லறை (மாற் 16: 1-8, மத் 28:1-10, லூக் 24:1-12, யோவா 21:1-10)

ஆ. எம்மாவு பயணம் (லூக். 24:13-35)

இ. உயிர்த்த இயேசுவின் காட்சிகள் (லூக். 24:36-43, யோவா 20:19-23, திப1:3-5, 1கொரி 15:5)

இந்த மூன்று வகையான இயேசுவின் உயிர்ப்புப் பற்றிய நற்செய்திகளின் செய்திகள் கிறிஸ்தவ வரலாற்றில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்றாலும் "தொடக்கத் திருச்சபையின் வாழ்வில் மிக முக்கிய பங்கு வகித்தவை, திறந்த கல்லறை பற்றிய செய்திகளை விடவும் உயிர்ப்புப் பற்றிய திருத்தூதர்களின் சாட்சியங்களே" என்று கர்தினால் வால்டர் காஸ்பர் கூறுகிறார், புதிய விவிலிய ஆராய்ச்சிகளின் வழியில் உயிர்ப்புப் பற்றிய நம்பிக்கைச் சாட்சியம் என்னும் உயிர்ப்பு அறிக்கையின் விளக்கமே செய்திகள் வழங்கும் திறந்த கல்லறை பற்றிய செய்திகள் என்று கூறலாம்.

**உயிர்ப்பு நம்பிக்கை :**

இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பே கிறிஸ்தவ நம்பிக்கையின் அடிப்படை கிறிஸ்தவ நம்பிக்கையின் ஊற்றும் நிலைத்த சக்தியுமாக விளங்குகிறது. இதுவே, இயேசுவின் உயிர்ப்பு பற்றிய நம்பிக்கை காணப்பட்ட தொடக்கக் காலத்திலேயே (கி.பி.30) இயேசுவின் உயிர்ப்புப் பற்றிய நம்பிக்கை, வரலாற்றில் நிரூபிக்கப்படக்கூடியதாக எண்ணப்பட்டது. அதன் காரணமாகவே வழிபாட்டிலும் அந்த நம்பிக்கை இடம்பெற்றது. யூதர்கள் பரப்பியது போன்று இயேசுவின் உயிர்ப்பு அவரது சீடர்களின் கட்டுக்கதையாக இருக்கமுடியாது. தொடக்க காலத்தில் இயேசுவின் சீடர்கள் அவரது உயிர்ப்பை நம்ப மறுத்தார்கள் (மாற் 16:14). இயேசுவே அவர்களது நம்பிக்கையின்மையைக் கடிந்துகொண்டார் (மத் 28:17). இந்நிகழ்ச்சி பற்றிய பயத்திலும் அச்சத்திலும் அவர்கள் வாழ்ந்தார்கள் (லூக் 24:37, யோவா 20:24-29).இதன்பிறகே, இயேசு உயிர்த்தார் என்ற உறுதியான அறிக்கையோடு அவர்கள் மக்களைச் சந்தித்தனர். இந்நிகழ்வு உறுதியான உயிர்ப்பு அனுபவம் இன்றி நிகழ வாய்ப்பில்லை. மத்தேயு நற்செய்தியாளர் உயிர்ப்பு பற்றிய யூதர்களின் எதிர்ப்பிரச்சாரத்தையே கட்டுக்கதை என்று குறிப்பிடுவது உற்றுநோக்கத்தக்கது. எனவே இயேசுவின் உயிர்ப்பு நிகழ்ந்ததா நிகழவில்லையா என்ற வாதங்களுக்கு இடமேயில்லை. வரலாற்று நிகழ்ந்துள்ள இயேசுவின் உயிர்ப்பு எத்தகையது என்பது பற்றிய இறையியல் வாதங்களுக்கு இடமுண்டே ஒழிய அது நிகழ்ந்ததா இல்லையா என்பது வாதப்பொருளாகவே இருக்கமுடியாது.

**உயிர்ப்பு – வரலாற்று நிகழ்வா?**

உயிர்ப்பு ஒரு வரலாற்று நிகழ்வா? என்ற கேள்வி ஒரு இருபதாவது நூற்றாண்டு கேள்வியெனலாம். வரலாற்று நிகழ்வாகிய உயிர்ப்பின் தொடர்ச்சியே உயிர்ப்புப் பற்றிய கிறிஸ்தவ நம்பிக்கை என்பதே காலம் காலமாக நம்பப்பட்டு வந்த உண்மை. மேலே எழுதப்பட்ட கேள்வியை முதலில் எழுதியவர் விவிலிய அறிஞர் புல்ட்மானாகும். அவரும் உயிர்ப்புப் பற்றிய வரலாற்றுத் தன்மையை கேள்விக்குள்ளாக்குவது நோக்கமாகக் கொள்ளவில்லை. வரலாற்றுத் தன்மையை விடவும் சீடர்களின் நம்பிக்கையையே உயிர்ப்பு நம்பிக்கைக்கு மிக முக்கியம் என்று வலியுறுத்துவதற்காக புல்ட்மான் இத்தகைய கேள்வியை எழுப்பினார். இதற்குப் பிறகு இருபதாவது நூற்றாண்டின் இறுதியில் டிரேவர்மான் என்ற இறையியலாளர் உயிர்ப்பு நிகழ்வு, உயிர்ப்புப் பொருள் என்ற சொல்லாட்சிகளை பயன்படுத்தினார். அவர் உயிர்ப்பு நிகழ்வை மறுத்து அது தரும் அர்த்தத்தை முக்கியம் என்று கருதினார். அது திருச்சபை ஆசிரியத்தாலும் பல முன்னணி இறையியலாளர்களாலும் கண்டிக்கப்பட்டது. ஏற்றுக் கொள்ள கூடிய ஓர் இறையியல் கருத்து ஒரு விசுவாச நிகழ்வின் வரலாற்றுத் தன்மையையும் அது தரும் ஆழமான அர்த்தத்தையும் பொறுத்தே அமையும். மேலும் வரலாற்று அடிப்படையற்ற அர்த்தங்கள் நிலைக்க இயலாது. ஆழமான பாதிப்பை ஏற்படுத்த இயலாது.

எனவே, புனித பவுலோடு சேர்ந்து உயிர்ப்பு நிகழ்வின் வரலாற்றுத் தன்மை அதிகமாக வலியுறுத்தப்பட வேண்டிய ஒன்றாக அமைகிறது. அதே சமயம் இந்த வரலாற்று நிகழ்வு பிற வரலாற்று நிகழ்வுகள் போன்ற ஒரு வரலாற்று நிகழ்வா அல்லது வரலாற்றைக் கடந்த ஒரு வரலாற்று நிகழ்வா என்ற கேள்வி இறையியல் வரலாற்றில் எழுப்பப்பட்டுள்ளது. பிற வரலாற்று நிகழ்வுகள் போன்றே முழுக்க முழுக்க நிரூபிக்கக்கூடிய வரலாற்று நிகழ்வே இயேசுவின் உயிர்ப்பு என்று வாதிடக்கூடியவர்களில் பானன்பெர்க் போன்ற தற்கால இறையியலாளர்களும் உண்டு. இவர்கள் இயேசு தனது சீடர்களுக்கு வழங்கிய உயிர்ப்புக் காட்சிகளையே உயிர்ப்பின் நிரூபணங்களாக கருதுகின்றனர். அதே சமயம் புனித அக்குவின் தோமா போன்ற மிகப் பெரிய கத்தோலிக்க இறையியலாளர் இதனை வரலாற்றைக் கடந்த வரலாற்று நிகழ்வு என்று குறிப்பிடுகின்றனர். அது என்ன வரலாற்றைக் கடந்த வரலாற்று நிகழ்வு? இயேசுவின் உயிர்ப்பு வரலாற்றில் நிகழ்ந்துள்ள ஒரு வரலாற்று நிகழ்வே. ஆனால் அது பிற வரலாற்று நிகழ்வுகள் போன்று வரலாற்றுக் காரணிகளின் துணை கொண்டு நிரூபிக்கப்படக்கூடியது அன்று

(11ம் பக்கம் பார்க்க...)

அறிந்துகொள்ளுவோம் -

## திருச்சபையை வழிநடத்திய பாப்புமாரின் சுருக்கமான சரிதைகள்

### புனித அனெக்லீற்றஸ் – Saint Anacletus 03

இவர் திருச்சபையின் மூன்றாவது பாப்பரசர் - இவர் கி.பி.76 - 88 வரை திருச்சபையை ஆண்டவர். ஐரேனியஸ் என்பவரின் கருத்துப்படி இவர் இராயப்பரோடும், அவரைத் தொடர்ந்து வந்த லீனஸோடும் இருந்து உதவி புரிந்தவராவர். தொமீசியன் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற வேத கலாபனையின் போது வேதசாட்சி முடிபெற்றார்.

## தூயவர்களின் வரலாறு

### – ஜனவரி 03 புனித நசியான்ஸ் கிரகோரியார் – (03)

இவருடைய தந்தையும் தாயும் புனிதராக வந்திக்கப்படுகிறார்கள். தாழ்ச்சி நிறைந்த இவர் குருப்பட்டம் பெற விரும்பவில்லை. இவர் பின்னர் ஆயராக்கப்பட்டார். இவரது தாழ்ச்சி, தவ முயற்சிகள், எளிய வாழ்வு இவற்றைக் கண்ட எதிரிகள் இவரை ஏளனம் செய்தார்கள். இவர் எங்கும் வெற்றி பெறுவதைக் கண்ட நண்பர்கள் இவர் மீது பொறாமை கொண்டார்கள். எனவே இவர் தம் பதவியை விட்டு விலகினார். "நம் எதிரிகள் தங்கள் ஆசிரியர் யாரென்று தங்கள் நடத்தையால் காட்டுகிறார்கள். நாமோ இயேசுவை நம் ஆசிரியர் என்று நம் நடத்தையால் காட்டுவோமாக" என்று இவர் அடிக்கடி கூறுவார்.

## உயிர்ப்பு உணர்த்தும்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

சீடர்களுக்கும் ஏனையவர்களுக்கும் அறிவிக்குமாறு வேண்டுகின்றார். அதாவது ஏழை எளிய மக்களுக்கு நற்செய்தியாக ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு அமைய வேண்டும் என்பதே இயேசுவின் விருப்பமாகும்.

ஆண்டவர் இயேசுவின் உயிர்த்தெழுதல் சம்பவம் மனித வாழ்வின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது. அதாவது வாழ்வின் பெறுமதி மனிதத்தின் மாண்பு இந்நிகழ்வின் மூலம் புலப்படுகின்றது. நாம் வாழும் இலங்கைச் சூழலில் போர், வறுமை, உரிமைகள் மறுப்பு, திட்டமிட்ட வன்முறைகள் போன்ற காரணிகளால் மனித வாழ்வு மரித்துப் போன சூழ்நிலைகள் காணப்படுகின்றது. இயற்கை செயற்கை அனர்த்தங்களினால் அர்த்தம் இழந்துபோய் உள்ள வாழ்வாதாரங்களுக்கு அர்த்தத்தையும் உயிர்ப்பையும் கொடுப்பது எமது கடமை ஆகும். ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு எவ்வாறு சீடர்களின் வாழ்விற்கு புதிய அர்த்தத்தைக் கொடுத்ததோ அதே வகையில் அவநம்பிக்கைச் சூழ்நிலையில் உள்ள எமது மக்களுக்கு நம்பிக்கையை அளிப்பதாக உயிர்ப்பு காணப்படுகின்றது.

ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பை வெறுமனே சரீர உயிர்த்தெழுதலுக்குள் மாத்திரம் அடக்கி விடமுடியாது. மாறாக இயேசுவின் உயிர்ப்பு அவருடைய போதனைகளான அன்பு - மன்னிப்பு - விடுதலை போன்றவைகளுக்கு உயிர் அளித்தன. இதே வகையில் இன்று நாம் வாழும் உலகில் ஆண்டவர் இயேசுவின் போதனைகள் அனைத்தும் நாளுக்கு நாள் மரித்துக் கொண்டு இருக்கும் சூழலில் வாழ்கின்றோம். எனவே, இந்த உயிர்ப்பின் செய்தி இயேசுவின் போதனைகளுக்கு மறுபடியும் உயிரூட்டுமாறு எம்மை அழைக்கின்றது. எனவே, உடல் உயிர்த்தெழுதல் மாத்திரம் கருத்தில் கொண்டு எமது செயற்பாடுகளை அமைத்துவிடாமல் போதனைகளுக்கு உயிரளிப்பது காலத்தின் தேவையாக கருதப்படுகின்றது.

எனவே, ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு கடவுளின் நீதியுள்ள செயற்பாட்டையும் வாழ்வின் முக்கியத்துவத்தையும் சமூக விடுதலையில் ஈடுபட வேண்டியதன் அவசியத்தையும் ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் ஆற்ற வேண்டிய பணிகள் பற்றியும், தீமைகள் நசுக்கப்படும் நம்பிக்கையையும், இறையரசில் மரணம் தோற்கடிக்கப்படும் என்ற உறுதிப்பாட்டையும் தருகின்ற அதே வேளை; நாம் மன்னிக்கும் சமூகமாகவும் வாழ்வளிக்கும் சமூகமாகவும் ஆண்டவர் இயேசுவின் போதனைகளுக்கு உயிர்கொடுக்க வேண்டிய சமூகமாகவும் மாற வேண்டியதன் அவசியத்தையும் எமக்குக் காட்டுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவலைகள்

## அமரர் ஏபிரகாம் யோண்பிள்ளை



இம்மாதம் 14ஆம் நாள் கொழும்பில் காலமானார் திரு. ஏபிரகாம் யோண்பிள்ளை. இவர் 1980 தொடக்கம் 1995 வரை புனித வளனார் அச்சகத்தில் உதவி மேலாளராகவும், பாதுகாவலன் பத்திரிகையின் உதவி ஆசிரியராகவும் சிறப்பாகக் கடமையாற்றியவர். இவருடைய நிர்வாகத்திறமையும், கடின உழைப்பும், தம்மையே முற்றாகத் தியாகஞ் செய்து உழைக்கும் பண்பும் எமது அச்சகத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாயிருந்தது.

இவர் பல்வேறு பாடசாலைகளின் ஆசிரியராகவும், பின் அதிபராகவும் சிறப்பாகக் கடமையாற்றி, மாணவர்களின் வளர்ச்சிக்கு பெரிதுவாகப் பாடுபட்டவர்.

இறுதியாக 'மாலடி' என்று அழைக்கப்பட்ட பாடசாலை புனித சாள்ஸ் மகா வித்தியாலயமாக வளருவதற்கு இவரின் கடின உழைப்பு முக்கிய காரணமாய் இருந்தது.

ஆழமான விசுவாசமும், பரந்த அறிவும் அனுபவமும் நிறைந்தவர் யோண்பிள்ளை மாஸ்ரர் [இவ்விதமாகத்தான் அச்சகத்திலும் இவரை அழைப்பர்], பணிசெய்த இடங்களையெல்லாம் வளர்த்துச்சென்றுள்ளார். அச்சகத்தை நன்மையப்படுத்த எடுக்கப்பட்ட முயற்சிகள் பல இவரின் நிர்வாகத்திறமையால் கைகூடின என்று துணிவோடு சொல்லலாம். எல்லாருக்கும் முதல் வேலைக்கு வந்து, இறுதிவரை பணியாற்றிச் செல்பவர் இவர்.

90ஆம் வயது எட்டுவதற்கு இருமாதங்களுக்கு முன்னமே இறைவன் இவரை நிறை வாழ்விற்கு அழைத்துவிட்டார். இவர் வாழ்வு இறை திட்டத்தின் நிறைவாக அமைந்துள்ள (mission accomplished) என்பதோடு, நல்லதொரு வாழ்வையும் எமக்கு வாழ்ந்து காட்டியுள்ளார் என்பதற்காக இறைவனுக்கு நன்றிகூறி, இறை பிரசன்னத்தில் இவர் என்றும் மகிழ இறைவனை இறைஞ்சுகின்றோம்.

(இவர் விட்டுச்சென்றுள்ள ஐந்து மக்களுக்கும் எமது அனுதாபங்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.)

**இவரை நன்றியுடன் நினைவுகூரும்**

அச்சக முகாமையாளர், பாதுகாவலன் ஆசிரியர், அச்சக பணியாளர்கள்.

## முதல் வருட நினைவஞ்சலி

| மண்ணகம் வந்தது | | விண்ணகம் சென்றது |
|---|---|---|
| 25.12.1917 |  | 01.04.2009 |

**அமரர் திருமதி திரேசா மனுவற்பிள்ளை**

கலைத்தாயாய் கற்பகத் தருவாய்
காலமெல்லாம் காத்து நின்ற கருணைமிகு அம்மாயே!
மருக்கும் துன்பமின்றித் தூக்கத்தில் மறைந்தாயே!
துயரத்தில் நாம் வாடித் துடிக்கின்றோம்
என்றென்றும் தூயவன் அருகிலிருந்து எமக்காக வேண்டும் அம்மா

அன்னாரது ஆன்ம இளைப்பாற்றிக்காக பங்குனி மாதம் 31ம் திகதி புதன்கிழமை காலை 6 மணிக்கு யாழ்ப்பாணம் கண்டிக்குளி புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

14/1 புதுமடம் ஒழுங்கை,
கோயில்வீதி, யாழ்ப்பாணம்.

Advt-28/10

இவரின் பிரிவால் துயருறும்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்
மற்றும் உற்றார் உறவினர்.

## நினைவுகூருகிறோம்

| 1ம் ஆண்டு | | 17ம் ஆண்டு |
|---|---|---|
|  | எமது அன்புப் பெற்றோர் இறைவனின் பேரின்பதில் மகிழ்ந்திருக்க இந்நாளில் அன்புடன் நினைவுகூருகின்றோம் |  |
| A.B. மரியாம்பிள்ளை | | மரியாம்பிள்ளை மரியம்மா |
| மலர்வு : 30.07.1921 | | மலர்வு : 10.05.1929 |
| உதிர்வு : 02.04.2009 | | உதிர்வு : 22.11.1993 |

30, புலவர் கோயில் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

Advt-25/10

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## யாழ் தூய மரியன்னை பேராலயம்
## பரிசுத்த வார வழிபாட்டு நேர ஒழுங்குகள்

**குருத்தோலை ஞாயிறு (28.03.2010)**

முதல் திருப்பலி - காலை 6.00 மணி (ஆயர் தலைமையில்)
இரண்டாம் திருப்பலி - காலை 7.30 மணி
மாலைத் திருப்பலி - மாலை 4.30 மணி

**புனித திங்கள் (29.03.2010)**

தைலம் மந்திரிக்கும் திருப்பலி - மாலை 4.30 மணிக்கு

**புனித வியாழன் (01.04.2010)**

திருப்பலி மாலை 5.00 மணி
இரவு ஆராதனை - இரவு 10.00 மணி

**பெரிய வெள்ளி (02.04.2010)**

சிலுவைப்பாதை - காலை 6.30 மணி
மாலை வழிபாடு - மாலை 4.00 மணி

**புனித சனி (03.04.2010)**

ஏழு வார்த்தைகள் தியானம் - காலை 6.30 மணி
திருவிழிப்பு வழிபாடு - இரவு 10.30 மணி

**உயிர்ப்பு ஞாயிறு (04.04.2010)**

முதல் திருப்பலி - காலை 5.15 மணி (ஆயர் தலைமையில்)
இரண்டாம் திருப்பலி - காலை 7.15 மணி

**எதிர்பாருங்கள் அடுத்த பாதுகாவலன் உங்கள் கைகளில் ஏப்பிரல் 18.04.2010 ஞாயிறு அன்று வெளிவரும்**

## நெஞ்சை விட்டகலா ஓராண்டு நினைவு



அமரர்
**நிக்கிலான் வின்சன்ட் போல்**
(அண்ணாவியார்)

மண்ணில் 19.05.1924 — விண்ணில் 01.04.2009

"வாழ்வில் நேசித்தீர்கள்;
மரணத்திலும் மறவாதீர்கள்"

"ஐயா, ஐயா என ஆசையுடன் அழைத்து மகிழ்ந்தோம்.
அன்பு காட்டி எம்மை எல்லாம் அரவணைத்தீர் ஐயா,
ஆண்டுகள் ஒன்று போனது ஒரு கணம்
போல் உள்ளது ஐயா,
என்றும் உம் நினைவை
மறவோம் ஐயா"

கடற்கரை வீதி,
மாவாத்துறை,
யாழ்ப்பாணம்.

Advt-27/10

அன்னாரின் நினைவில்
இம்மானுவேல் குடும்பத்தினர்.

## நீங்காத நினைவுகள்

**வில்பிரட் மேரி லூட்ஸ்**
(மலர்க்கனி)

மண்ணில் 03.04.1975 — விண்ணில் 16.05.2009



இறைவன் தந்த முதல் முத்தே
சித்திரை மாத முழு நிலவே - உன்
காலடி காணக் காத்திருந்தோம்
ஏன் அம்மா உன் அடி தறிமாறியது
எம் துயர் துடைக்க நீ இல்லை
அழைத்த இறைவன் உன்னை
அவர் பாதமதில் இருக்க
அனுதினமும் வேண்டுகின்றோம்.

இல. 15, கணட்ஸ் லேன்
கண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

Advt-26/10

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## 1 ம ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**மரியநாயகம் யோசேப் அன்ரனி**

பிறப்பு 23.06.1971 — இறப்பு 28.03.2009

நாட்கள் நகர்ந்தாலும் நீங்காத்துயர்
தன்னில் நீந்துகின்றோம்
எம்மை பேணி கடமைதனை ஆற்றி
மறைந்துவிட்ட உங்கள் ஆன்மா
சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

83, கடற்கரைவீதி,
[illegible]

Advt-24/10

பிரிவால் துயருறும்
பெற்றோர், மனைவி,
பிள்ளைகள், உறவினர்

**உயிர்ப்பு இறையியல்....**
(10ம் பக்கத் தொடர்ச்சி)

என்பது இவர்களின் கருத்து. ''சிலுவையில் அறையுண்ட இயேசுவை ஊனக் கண்களால் கண்டவர்கள் உயிர்த்த இயேசுவை நம்பிக்கைக் கண்களாலேயே காண முடிந்தது'', என்றார் புனித அக்குவின் தோமா.

**இறுதியாக**

இயேசுவின் உயிர்ப்பு கிறிஸ்தவ நம்பிக்கையின் அடிப்படை. இது ஒன்றே வரலாற்றில் வாழ்ந்த மாமனிதர்களிடமிருந்து இயேசுவைப் பிரித்து இறைமகனாக இனம் காட்டுகிறது. இயேசுவின் இறப்பால் கோழைகளாக மாறிய அவரது சீடர்கள் அவரது உயிர்ப்பால் மட்டுமே தங்களது உயிரையும் தரக்கூடிய வீரர்களாக மாறியிருக்க சாத்தியமுண்டு. உயிர்த்த இயேசுவின் ஆவியைப் பெற்றவர்களே அவரது உயிர்ப்புக்குச் சான்று பகர்ந்தார்கள். இயேசு உயிர்க்காவிட்டால் கிறிஸ்தவம் என்னும் மாபெரும் இயக்கம் தோன்றியிருக்க வாய்ப்பில்லை, மேலும் அது வரலாற்றில் பல்வேறு சோதனைகளை சந்தித்து வெற்றி பெற்றிருக்கவும் வாய்ப்பில்லை. அர்த்தம் பொதிந்த வரலாற்று நிகழ்வாகிய இயேசுவின் உயிர்ப்பு இந்த மானிடத்திற்கு மறுமைக மெய்மையின் வரலாற்று அடையாளமாக அமைந்துள்ளது.

## உயிர்ப்பின் மகிமையில்...



கல்வாரி நாயகனே!
கடவுளின் திருமகனே!
கதியிழந்து தடம்புரண்டு
கல்வழியில் தினம் விழும்
கம்பனை பண்டித்த எமக்கு
கருணையின் உன்னதத்தை
தந்திடுவாய் இக்காலமதில்...

உயிர்ப்பின் வேந்தனே!
வேதனை தீர்த்திடும் நாயகனே!
வேறுவழியின்றி பேசமொழியின்றி
உள்ளத்தில் அமைதியின்றி
காலபோதும் பாதையில்
போகின்ற எங்களை உம் உன்னத
உயிர்ப்பின் மகிமையில் பங்குபெற
வரமருள்வாய் இக்காலமதில்.

H.B. டிலுசா
கொம்பாத்தோட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

# உயிர்த்தெழுந்தார்



ஜெருசலேமில் ஒரு கல்லறை! அதைச்சுற்றி ஒரு கோயில் அது இயேசுவின் கல்லறைக் கோயில்.

இக்கோயில் பல கதைகள் சொல்லும்

இக்கோயிலின் உள்ளே பல்வேறு ஸ்தலங்கள்: இயேசுவின் உடைகளை களைந்த இடம்; பக்கத்தில் அவரை சிலுவையில் அறைந்த இடம்; இயேசு சிலுவையில் தொங்கி மரித்த இடம்; மாதா மடியில் இறைமகன் வளர்த்தப்பட்ட இடம்; பரிமளதைலம் பூசப்பட்ட இடம்; கல்லறையில் வைக்கப்பட்ட இடம்.

யாவும் ஒரே கோயிலுக்குள் அடங்கி விடுகின்றன. இந்த கல்லறைக்கோயில் இறுதியாக நமக்களிக்கும் செய்தி என்ன தெரியுமா? அதுதான் தூதன் அளித்த செய்தி:

''அவர் இங்கு இல்லை"

இறந்தவர் கல்லறையில் இல்லை! அவர் வாழ்கிறார் வாழச்சென்றுள்ளார்! எத்தனை புரட்சிகரமானவர் இயேசு என்றால் இத்தகைய சிலுவை மரணமும், இத்தகைய கல்லறையும்தான் அவருக்குக் கிடைக்கும்.... உண்மைதான்!

ஆனால் கல்லறை அவரை அடக்கி வைக்கமுடியவில்லை...

அவரது கருத்துக்கள் சிந்தனைகள் புரட்சிகள் மட்டும் உலகத்தில் பரவவில்லை! அவரே உலகில் பரவி விட்டார்!! இதுதான் கிறிஸ்தவம் தரும் மாபெரும் நற்செய்தி!



கல்லறை திறந்து
மெல்ல
சாவைக் கடந்த
இயேசுவின் உயிர் வருகை
கல்லறைகளே இல்லாது
போனவர்களுக்கு
இளைப்பாற்றியும்
வருந்தி சுமப்பவர்களுக்கு
வளமையும்
வலிகளால் விதிவரைந்த
மனங்களுக்கு
நம்பிக்கை தரும் எனும்
தீராத எதிர்பார்ப்புக்களுடன்.....





## ஆற்றல் மிகு அறிவுரையில் அற்புதர்! நீரே!



ஆற்றல்மிகு அறிவுரையில் அற்புதர்! நீரே!
அழகுமறைக் கலைவளர்த்த அந்தோனிமுனி! நீரே!

போற்றுகின்ற மாதவத்தின் பொன்விளக்கும் நீரே!
புகழ்வளர்த்த அறியாத பெருந்பணியும் நீரே!

தேற்றரவு தருகின்ற, திவ்வியனும் நீரே!
தெருவீதி பவனிவந்த திருமகனும் நீரே!

மாற்றமில்லா மகிமையிலே மனுக்குலம் ஒளிவீச
பாசற்ற லீலியே மன்றாடும் மாபரனை!!

*ஞா. அரியமலர்*
*மிருசுவில்.*

## உயிர்த்த இயேசுவின் ஆசிகள் உங்கள் உயிர்த் துடிப்புள்ள பணிகளுக்கு உரமூட்டுவதாக!



இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2010 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org